KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823

Follow us:

# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்



மலர்: 05, இதழ்: 215 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமை
(23.04.2025) ஹிஜ்ரி 1446, ஷவ்வால் - 24, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12

KDK
SINCE 1909
JAPAN
CUSTOM AIR
EXPERIENCE
(011) 250 0823

# பாப்பரசரின் பூதவுடல் 27இல் நல்லடக்கம்



## இறுதி நிகழ்வில் ட்ரம்ப் - ஸெலென்ஸ்கி - மெக்ரோன் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பங்கேற்பு

» 10பக்கம்

# கெஹேலிய மீது உயர்நீதிமன்ற விசாரணை

## கோருகிறார் சட்டமா அதிபர்



ம.சுசிகலா

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்தமை தொடர்பாக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 12 பேருக்கு எதிரான வழக்கை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மூவர் கொண்ட அமர்வு முன்னிலையில் விசாரணைசெய்ய வேண்டும்... » 02 பக்கம்

# ஈஸ்டர் தினத் தாக்குதல் முக்கிய தகவல்கள் கிடைத்துவிட்டன!

## ஜனாதிபதி அநுர நேற்று கம்பஹாவில் அறிவிப்பு



“ஐந்து வருடங்களாக ஈஸ்டர் தினத் தாக்குதல் குறித்து விசாரணைகள் முறையாக நடக்கவில்லை. அவை மூடி மறைக்கப்பட்டன. உண்மையான குற்றவாளிகளை தப்பிக்கச் செய்யும் வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டன.

நாங்கள் 06 மாதங்களில் அவற்றை ஆரம்பித்தோம். சந்தேகத்துக்கிடமான 06 சம்பவங்கள் தொடர்பான விடயத்தில் 02 சம்பவங்கள் தொடர்பான உண்மைகள் வெளிவந்துள்ளன. வவுணதீவுக்கு அங்கியொன்றை கொண்டு சென்றது யார், எவ்.பி.ஐயினால் வழங்கப்பட்ட சிம் அட்டையின் ஹிமி இலக்கம் யாருடையது? என்பதை கண்டறிந்துள்ளோம். எத்தனை காலம் சென்றாலும் நீதி நிலைநாட்டப்படும். அனைவரும் சட்டத்தின் முன் சமம் என்பதை நாங்கள் உறுதிப்படுத்துவோம்” இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று (22) நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

» 02 பக்கம்

## ஈஸ்டர் தினத் தாக்குதல் அறிக்கை;

# ஆராய விசேட பொலிஸ் குழு



உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் 67,000 பக்கங்களைக் கொண்ட அறிக்கை ஆய்வுசெய்ய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்டவின் தலைமையில் நால்வர் அடங்கிய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்தார். » 02 பக்கம்

# பிள்ளையான் மீது பல குற்றச்சாட்டுக்கள்

## விசாரணைகளில் பல்வேறு தகவல்கள் வெளிவருவதாக அரசாங்கம் தகவல்





கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியரை காணாமலாக்கியது மாத்திரமே பிள்ளையான் செய்த ஒரே தவறு என்று தீர்மானம் எடுத்துவிட வேண்டாம். அவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. தடுப்புக்காவலில் வைத்து அவரிடம் முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளில் பல்வேறு தகவல்கள் வெளியாகி வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். » 02 பக்கம்

# பெசில் உள்ளிட்ட பலர் குறித்தும் விசாரணை செய்க



## இன்னும் பல உண்மைகள் தெரியவரும் என்கிறார் சாணக்கியன்

“ஆசாத் மௌலானாவின் வாக்கு மூலத்தை அடிப்படையாகக் கொண்டு பிள்ளையானை கைதுசெய்திருப்பார்களாக இருந்தால், அவரின் கூற்றுப்படி இன்னும் பலர் அந்தப் பட்டியலில் இருக்கிறார்கள். குறிப்பாக முன்னாள் நீதி அமைச்சர் மீதும் பல குற்றச்சாட்டுகள்... » 02 பக்கம்

## பேச்சுவார்த்தைக்கு வராவிட்டால்

# நாளை ஆர்ப்பாட்டம்

## சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பு அமைச்சுக்கு எச்சரிக்கை




ஒன்றிணைந்த சுகாதார பட்டதாரிகளின் பிரச்சினை தொடர்பில் பேச்சுவார்த்தைக்கு அழைக்காவிட்டால், சகல மாணவர்களின் பங்குபற்றலுடன் நாளை (24) பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கு ஆதரவளிக்கும் வகையில் வைத்தியசாலைகளின் மட்டத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கறுப்புப்பட்டி அணிவிக்கும் வேலைத்திட்டத்தையும் முன்னெடுக்கவுள்ளதாகவும்... » 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



ஈஸ்டர் தின விசாரணை என்ற பரபரப்பு மட்டும்தான் இருக்குது பாருங்கோ... ஒன்றுமே நடந்த மாதிரி தெரியேல்ல...

## உஷ்



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பந்தமான சூத்திரதாரிகளை கண்டறிவது ஒருபக்கம் நடக்க, இந்த தாக்குதல் சம்பந்தமான தகவல் கிடைத்தும் அசட்டையாக இருந்த அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தகவல்.

அப்படி தயார் செய்யப்பட்டுள்ள பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறாராம் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன.

## தபால்மூல வாக்களிப்புக்கு

# 648,495 பேர் தகுதி

## கண்காணிப்புக்காக 4,000 அதிகாரிகள் கடமையில்





உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நாளை (24) ஆரம்பமாகவுள்ள நிலையில் தபால் வாக்குச்சீட்டு விநியோகப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அதற்கமைய இம்முறை 06 இலட்சத்து 48 ஆயிரத்து 495 பேர் தபால்மூலம் வாக்களிக்கத் தகுதிப்... » 02 பக்கம்



# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளரின் மகன் கைது

## கஜேந்திர குமார் பொன்னம்பலம் கண்டனம்





(பு.கஜிந்தன்)

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சிக் கிழக்கு இணைப்பாளர் சற்குணா தேவியின் மகனை தேர்தல் விதிமுறைகளை மீறி நேற்று (22) மருதங்கேணி பொலிஸார் கைது செய்துள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். தன்னுடைய உத்தியோகபூர்வ முகநூல் பதிவில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் உள்ள வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான அமைப்பின் அமைப்பாளராக ஜெகதீஸ்வரன் சற்குணாதேவி உள்ளார்.

அவர் பருத்தித்துறை பிரதேச சபைத் தேர்தலுக்கான வேட்பாளராகவும் இருந்தார். ஆனால் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. சில நாட்களுக்கு முன்பு மருதங்கேணி காவல்துறையினரால் இன்று காலை ஏற்பாடு செய்யப்பட்ட வேட்பாளர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதால் அவர் செல்லவில்லை. சுமார் அரை மணி நேரத்துக்கு முன்பு பொலிஸார் அவரது வீட்டுக்கு வந்து ஏன் கலந்து கொள்ளவில்லை என்று கேட்டனர்.

அவர் இனி வேட்பாளர் இல்லை என்று கூறியபோது, கலந்து கொள்ளச் சொன்னால் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்று கூறி அவரைத் திட்டினர், மேலும் எந்த காரணமும் கூறாமல் அவரது உடல்நிலை சரியில்லாத மகனைக் கைது செய்தனர்.

சற்குணாதேவியின் வலுவான மற்றும் ஊழலற்ற அரசியல் செயற்பாட்டுக்காக மதுதங்கேணி காவல்துறையினரால் பலமுறை துன்புறுத்தப்பட்டுள்ளார். அவரது கணவர், மகன் மற்றும் எங்கள் கட்சியின் பிற உறுப்பினர்களை பொலிஸார் தொடர்ந்து பொய் வழக்குகளில் குறிவைத்து, பின்னர் விடுவிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

## ஈஸ்டர் தின தாக்குதல்...

''நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை சிறப்புறச் செய்யவேண்டுமென்றால் சட்டத்தை முறையாக நிறைவேற்ற வேண்டும். சட்டமில்லாமல் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியாது. செல்வந்தர்களுக்கு ஒரு சட்டமும் ஏழைகளுக்கு இன்னுமொரு சட்டமும் ஆட்சியாளர்களுக்கு ஒரு சட்டமும் ஏனையவர்களுக்கு இன்னுமொரு சட்டம். இந்தவொரு நிலைமையே இந்த நாட்டில் இருந்தது. அதனை மாற்றியமைத்துள்ளோம்.

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக பொலிஸ் மா அதிபர் பொலிஸாருக்கு பயந்து தலைமறைவானார். தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் இல்லாவிட்டால் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாது. காரணம் அவர்களிடமே அதிகாரம் இருக்கும். அதிகாரம் இருப்பவர்களுக்கு எதிராக கடந்த காலங்களில் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதில்லை. ஆனால் நாட்டின் நிலைமை இன்று அவ்வாறில்லை.

அண்மையில், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் சட்டத்தரணியொருவர் நீதவான் நீதிமன்றத்துக்கு சென்று கருத்து முன்வைத்து முக்கியஸ்தர் ஒருவருக்கு பிணை வழங்க வேண்டாம் என்று குறிப்பிட்டிருந்தார். அதற்கமைய, 10 வருடங்களுக்கு பழைமையான வழக்கு தொடர்பிலேயே நீதவான் நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. அதன்போது நீதவான் அந்த சட்டத்தரணியிடம் 10 வருடங்கள் வரையில் இந்த விடயங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க காலதாமதமானமைக்கு காரணம் என்ன என்று வினவியுள்ளார். அதற்கு சட்டத்தரணி, 10 வருடங்களும் இவர்களே ஆட்சியிலிருந்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதாவது அதிகாரத்தினால் பல்வேறு விடயங்களை மூடிமறைத்திருக்கிறார்கள். அமைச்சரொருவர் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திலிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு, தேர்தல் காலத்தில் கிரியுல்ல பிரதேசத்தில் வெள்ள நிவாரணம் வழங்கியுள்ளார்கள். வெள்ள நிவாரணம் வழங்குவதற்கான உரிமை எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கு இல்லை என்பதும் அந்தக் காலப்பகுதியில் அந்தப் பகுதியில் வெள்ளம் ஏற்படவில்லை என்பதும் விசாரணைகளில் உறுதியாகியுள்ளது. இதற்கு என்ன செய்வது என்று சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் 2015 ஆம் ஆண்டு ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. அதற்கு சட்ட மா அதிபர் திணைக்களத்தால் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன. ஆனால் அதற்கான பதில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 08, சம்பந்தப்பட்டவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதாவது 10 வருடங்கள் அந்த ஆவணத்துக்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு சரியான பதில் சட்ட மா அதிபர் திணைக்களத்திடமிருந்து கிடைக்கவில்லை.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்திருக்காவிட்டால் இன்னும் பதில் கிடைத்திருக்காது. எனவே, பக்கச்சார்பின்றி நாங்கள் சட்டத்தை சமமாக நிலைநாட்டியுள்ளோம். இது நாட்டுக்கு மிக அவசியமாகும். குற்றப்புலனாய்வு திணைக்களம், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு, சட்ட மா அதிபர் திணைக்களம் என்பவற்றில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதனூடாக விசாரணை செயற்பாடுகளை உயிர்ப்பித்துள்ளோம்.

அநுராதபுரம் பிரதேசத்திலுள்ள முதலமைச்சரொருவருக்கு அமைச்சின் நிதியை மோசடி செய்ததாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. அந்தக் குற்றச்சாட்டில் முதலமைச்சர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அவருக்கு இலகுபடுத்தப்பட்ட தண்டனை வழங்குமாறு கோரியுள்ளார். ஆனால் மேல்நீதிமன்ற நீதியரசர் 25 இலட்சம் ரூபா தண்டப்பணம் விதித்து 16 வருட சிறைத் தண்டனையும் விதித்து உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு தண்டனை வழங்கினால் உயிரிழந்த ஆத்மாக்களும் பயங்கொள்ள வேண்டிவரும். அதுவே சட்டத்தின் ஆட்சியாகும்.

சட்ட நிறுவனங்களுக்கு அதிகாரத்தை வழங்கி, நிறுவனங்களை வலுப்படுத்தி சுத்தப்படுத்தி அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். இதுவே அவசியமாகும். இதற்கு சமமானவொரு சம்பவமே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவமாகும். நேற்றுடன் (நேற்று முன்தினம்) உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று ஆறு வருடங்கள் நிறைவடைகின்றன. ஆனால் இந்த ஆறு வருடங்களில் ஐந்தரை வருடங்களும் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்ற தினத்திலிருந்து இந்த தாக்குதல் சம்பவத்தை மூடிமறைக்கும் வகையிலேயே செயற்பட்டுள்ளார்கள்.

ஐந்து வருடங்களாக இந்தச் சம்பவத்தை மூடிமறைத்து, சாட்சிகளை மூடிமறைத்து, விசாரணையை திசைதிருப்பி, உண்மையான நோக்கெல்லையை திசைதிருப்பியே விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு ஆறு வருடங்கள் கடந்திருந்தாலும் ஐந்தரை வருடங்களும் விசாரணைகள் மூடிமறைக்கப்பட்டுள்ளன. ஆறு மாதங்களில் விசாரணைகளை மீண்டும் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். விசாரணைகளுக்கு பலன் கிடைக்கிறது. சரிசெய்து கொள்ளவேண்டிய ஆறு பிரச்சினைகளை குறிப்பிட்டிருந்தோம்.

அந்த ஆறில் இரு பிரச்சினைகளை சரிசெய்து கொண்டுள்ளோம். வவுணதீவு பிரதேசத்தில் யார் ஜெகட்டை வைத்தது, இமி இலக்கங்களுக்குரிய தொலைபேசிகளின் உரிமையாளர்கள் யார்? போன்ற விடயங்களை தேடிக் கண்டுபிடிப்போம். எவ்வளவு பழைய விடயமாக இருந்தாலும் இந்த சகல பிரச்சினைகளுக்கு மீண்டும் நீதியை நிலைநாட்டுவோம் என்பதை உறுதிபடக் கூறுகிறேன்.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்றால் சகலரும் சட்டத்துக்கு கீழ்படிய வேண்டும். சட்டத்தின் மீது பயம் இருக்க வேண்டும். இவ்விரு பண்புகளும் பொது மக்களிடம் மாத்திரமே இருக்கிறது. ஆனால் அரசியல்வாதிகளிடம் அந்த பண்பு இல்லை. அவ்வாறு இருந்தால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அழைப்பு விடுத்தபோது எனக்கு புத்தாண்டு என்று கூறுவார்களா? இதுவே அவர்களின் கலாசாரம். சட்டத்தை மதிப்பதை அவமானமாகவும் பொருத்தமற்றதாகவுமே அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் சகலரும் சட்டத்துக்கு கீழானவர்கள், சட்டத்துக்கு பயந்தவர்கள் என்ற பண்பை கொண்ட நாட்டை உருவாக்குவோம். 76ஆம் ஆண்டுகளின் பின்னர் மக்களின் பணத்தை திருடாத நாட்டை உருவாக்கியுள்ளோம். இதற்கு முன்னர் ஆட்சியாளர்கள் பெற்றுக்கொண்ட சிறப்புரிமைகளை பறிக்கும் வகையிலான அமைச்சரவையை உருவாக்கியுள்ளோம்'' என்றார்.

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை;...

மேலும், இந்த குழு பிரதான குழுவாக செயற்படும் என்பதுடன் இதனுடன் இணைந்தவகையில் மேலும் சில உபக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் நேற்று (22) இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை பொலிஸ் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை ஆய்வு செய்வதற்காக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்டவின் தலைமைத்துவத்தில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதி பொலிஸ் மா அதிபர், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் பயங்கரவாத விசாரணை பிரிவின் பணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விசேட குழு நான்கு உறுப்பினர்களை கொண்டது என்பதுடன் இந்த குழுவினூடாக மேலும் உபக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன. அந்த உபக்குழுக்களினூடாக இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வருகிறது. அறிக்கை தொடர்பான ஆய்வுகளின் பின்னர், இதனூடாக உருவாகும் புதிய விடயங்கள் தொடர்பில் புதிதாக விசாரணைகள் ஆரம்பிக்கப்படும். இந்த ஆணைக்குழு அறிக்கை 66,000 – 67,000 பக்கங்களை கொண்டதாகும். அதற்கமைய, தற்போது நியமிக்கப்பட்டு பிரதான குழு மற்றும் ஏனைய உபக்குழுக்களினூடாக இந்த அறிக்கை ஆய்வுசெய்யப்பட்டு வருகிறது. மிக குறுகிய காலத்தில் இதுதொடர்பான விசாரணைகளை ஆரம்பித்து அந்த விசாரணைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக அடுத்தக்கட்ட சட்ட நடவடிக்கைகளை எடுக்க பொலிஸ் திணைக்களத்தினூடாக நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார்.

## தபால்மூல வாக்களிப்புக்கு...

பெற்றுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க நேற்று (22) தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுக்கும் இடையிலான விசேட பேச்சுவார்த்தையொன்று நேற்று முன்தினம் (21) கொழும்பில் இடம்பெற்றிருந்தது. இதன்போது இம்முறை தேர்தலில் 4,000 வரையிலான கண்காணிப்பாளர்களை பணிக்கமர்த்த திட்டமிட்டுள்ளதாகவும் சகல வாக்களிப்பு நிலையங்களிலும் தெரிவு செய்யப்பட்ட வாக்களிப்பு நிலையங்களை கண்காணிக்கவும் வாக்களிப்பு தினத்தன்று 3,000க்கும் அதிகமான கண்காணிப்பாளர்களையும் 200க்கும் அதிகமான கண்காணிப்பு வாகனங்களையும் கடமைக்கு அமர்த்தவும் திட்டமிட்டுள்ளதாக பெப்ரல் அமைப்பு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் தேர்தல் ஆணையாளர் நாயகம் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்குச் சீட்டுகள் விநியோகம் செய்து நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய, இந்த சகல உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலை எதிர்வரும் மே மாதம் 06ஆம் திகதி நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

இம்முறை தபால்மூல வாக்களிப்புக்காக 648,495 பேர் தகுதிபெற்றுள்ளனர். அதற்கமைய, 24, 25, 28 மற்றும் 29ஆம் திகதி வரையான நான்கு நாட்களில் அந்தந்த வாக்காளர்களின் சேவை இடங்களில் வாக்களிப்பு இடம்பெறும். இதன்போது கண்காணிப்புக்காக 10,000 வரையான பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் மேற்குறிப்பிட்ட நான்கு தினங்களில் கண்டி உயர் மகளிர் வித்தியாலயத்தில் வாக்களிக்க முடியும்'' என்றார்.

## பெசில் உள்ளிட்ட பலர்...

முன்வைக்கப்பட்டுள்ளன. பெசில் ராஜபக்ஷ நீதித்துறையில் எவ்வாறு தலையிட்டார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆகவே இந்த விடயங்களையும் ஆராய்ந்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று (22) இடம்பெற்ற வழக்கு விசாரணையொன்றில் பங்குபற்றியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

''பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவிப்பொன்றை விடுத்து உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தில் பிள்ளையானுக்கும் தொடர்பு இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். அந்த வகையில் இந்த விடயம் தொடர்பில் விரைவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று ஆறு வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில், பிரதான சூத்திரதாரி யார் என்று அறிவிப்பதாக ஜனாதிபதியும் அறிவித்திருந்தார். இருந்தபோதும் நேற்று முன்தினம் வரை (21) பிள்ளையானை கைதுசெய்ததை தவிர வேறு எந்தவொரு விடயமும் இடம்பெறவில்லை.

ஆசாத் மௌலானாவின் வாக்குமூலத்தை அடிப்படையாகக்கொண்டு பிள்ளையானை கைதுசெய்திருப்பார்களாக இருந்தால், அவரின் கூற்றுப்படி இன்னும் பலர் அந்தப் பட்டியலில் இருக்கிறார்கள். குறிப்பாக முன்னாள் நீதி அமைச்சர் மீதும் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பெசில் ராஜபக்ஷ நீதித்துறையில் எவ்வாறு தலையிட்டார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆகவே இந்த விடயங்களையும் ஆராய வேண்டும்.

அதேபோல் 2024ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நான் ஆற்றிய உரை தெற்கில் மிக வேகமாக பகிரப்பட்டு வருகிறது. அதில் நான் பிள்ளையானை கைதுசெய்து விசாரித்தால் பல உண்மைகளை அறியலாம் என்று குறிப்பிட்டிருப்பேன். அந்தவகையில், பிள்ளையானை தற்போது கைதுசெய்திருக்கிறார்கள். ஏனைய உரைகளிலும் பல உண்மையான விடயங்களை வெளியிட்டிருக்கிறேன். ஆகவே அதுதொடர்பிலும் விசாரணை செய்து ஏனைய தரப்பினருக்கு எதிராகவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.

## கெஹேலிய மீது...

என்று சட்ட மா அதிபர் பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதத்தை சட்ட மா அதிபர் பிரதம நீதியரசருக்கு அனுப்பிவைத்துள்ளார். அந்தக் கடிதத்தில், தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ததால் இலங்கைக்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

அரசுக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் பொதுமக்களுக்கு ஏற்பட்ட தீங்கைக் கருத்தில் கொண்டு, இந்த வழக்கை 2018ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க சிறப்புச் சட்டத்தின் கீழ் ஒரு சிறப்பு வழக்காகக் கருதி, நிரந்தர மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட வேண்டும் என்று சட்ட மா அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்ததன் மூலம் அரசாங்க நிதியை தவறாகப் பயன்படுத்திய சந்தேகத்தின்பேரில், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட பிரதிவாதிகள் குழுவை பொது சொத்துச் சட்டத்தின் கீழ் பிணையில் விடுவிக்க மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த விவகாரம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் ரம்புக்வெல்ல பல சந்தர்ப்பங்களில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தரமற்ற மருந்து இறக்குமதிக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கெஹேலிய ரம்புக்வெல்ல கைதுசெய்யப்பட்டார்.

இந்த வழக்கில் தொடர்புடைய பல சந்தேகநபர்கள் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ரம்புக்வெல்ல கைதுசெய்யப்படுவதற்கு முன்பு, சம்பவம் தொடர்பாக ஏழு பேர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பேச்சுவார்த்தைக்கு...

சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (22) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

''ஒன்றிணைந்த சுகாதாரத்துறைக்கு இணைத்துக் கொள்ளவுள்ள சுகாதார பட்டதாரிகளின் பிரச்சினை தொடர்பில் அரசாங்கமோ சுகாதார அமைச்சோ இதுவரையில் எந்தவொரு பதிலையும் வழங்கவில்லை. விசேடமாக சுகாதார அமைச்சின் செயலாளர் தற்போது வெளிநாடு சென்றுள்ளார். அமைச்சரின் தொலைபேசி அழைப்புகளுக்கும் பதில் கிடைப்பதில்லை. கவனமின்மையின் காரணமாகவே இந்தப் பிரச்சினை தீர்வின்றி நீடித்து வருகிறது.

2021ஆம் ஆண்டிலிருந்து இந்த ஒன்றிணைந்த சுகாதார பட்டதாரிகள் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்படாமல் இருக்கிறார்கள். இது சுகாதார அமைச்சின் தவறின் காரணமாக இடம்பெற்றுள்ளது.

அதற்காக தனியான பரீட்சைகளும் நடத்த வேண்டும். ஆனால் இன்றும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு அதிகாரிகளையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினோம். இந்தப் பிரச்சினைக்கான பொறுப்பை தாம் ஏற்றுக்கொள்வதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் ஏற்றுக்கொண்டிருந்தது.

ஆனால், புதிய அரசாங்கத்தின் கீழ் இந்த விடயம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் கலந்துரையாடுவதற்கு சுகாதார அமைச்சுக்கு நேரமில்லாமல் இருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கான பொறுப்பை நளிந்த ஜயதிஸ்ஸவே ஏற்க வேண்டும்.

எனவே, இந்தப் பிரச்சினை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சரும் அமைச்சின் செயலாளரும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதுதொடர்பில் ஒரு மாதத்துக்கு மேல் கோரிக்கை முன்வைத்து வருகிறோம். ஆனால் பதில் இல்லை. இதற்கு அப்பால் இந்தத் துறை சார்ந்தவர்கள் தொடர்பில் பலவந்தமாக பரீட்சை நடத்த திட்டமிட் டுள்ளார்கள்.

ஆனால், தனியார்த் துறை மாணவர்களை தவிர வேறு எந்தப் பட்டதாரிகளும் பரீட்சைக்கு தோற்றமாட்டார்கள்.

எனவே, எதிர்வரும் இரு நாட்களில் இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தைக்கு நேரம் ஒதுக்காவிட்டால் சகல மாணவர்களின் பங்குபற்றலுடன் 24ஆம் திகதி பெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். அதற்கு ஆதரவளிக்கும் வகையில் வைத்தியசாலைகளின் மட்டத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கருப்புப் பட்டி அணிவிக்கும் வேலைத்திட்டத்தையும் முன்னெடுப்போம்'' என்றார்.

## பிள்ளையான் மீது...

மேலும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்து எதிர்க்கட்சியினர் வீண் அச்சம் கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (22) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவம் மீதான விசாரணைகள் தொடர்பில் எதிர்த்தரப்பிலுள்ளவர்கள் ஏன் இந்தளவு தூரம் அச்சம் கொள்கிறார்கள் என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது. குற்றப்புலனாய்வுத் திணைக்களமே விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது. விசாரணைகளின் அடிப்படையில் சிலர் கைதுசெய்யப்பட்டுமுள்ளனர். சிலரிடம் சாட்சிகளும் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. இதுதொடர்பில் எதிர்த்தரப்பினர் அச்சம் கொள்ள வேண்டியதில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் உதய கம்மன்பில, நாமல் ராஜபக்ஷ போன்றோர் பதற்றத்தில் வெவ்வேறு கருத்துகளையும் வெளியிட்டு வருகிறார்கள். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று ஆறு வருடங்கள் கடந்திருந்தாலும் ஐந்தரை வருடங்கள் வரை விசாரணைகளை மூடிமறைக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதன் அடிப்படையிலேயே நாங்கள் தற்போது விசாரணைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளோம்.

இந்த ஆறு வருடங்களில் முறையான விசாரணைகளை முன்னெடுத்திருந்தால் தற்போது இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகள் உள்ளிட்ட பின்னணியிலுள்ள சகலத் தரப்பினரையும் நாட்டுக்கு வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருந்திருக்கும். ஆனால் கடந்த ஐந்தரை வருடங்களிலும் விசாரணைகளை மூடிமறைப்பதற்காக அமைச்சரவையினூடாக பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒருசில அறிக்கைகளின் பரிந்துரைகளை நடைமுறைபடுத் தாமலிருப்பதற்கு அமைச்சரவையில் தீர்மானமும் எடுக்கப்பட்டிருந்தது. விசாரணை அதிகாரிகள் இடமாற்றம் செய்திருந்தார்கள். ஒருசிலர் இந்த நாட்டில் இருக்க முடியாத நிலையை உருவாக்கியிருந்தார்கள். சாட்சிகளை மூடிமறைத்தார்கள். இந்தக் பின்னணியில் கடந்த ஆறு மாதங்களே விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விசாரணைகளின்போது ஏற்கனவே மூடிமறைக்கப்பட்ட கண்டுகொள்ளப்படாத விடயங்கள் வெளிப்பட்டுவரும் நிலையில் இவர்கள் அச்சம் கொள்வது மக்களுக்கு புரியுமென்று நம்புகிறோம். எனவே, விசாரணைகள் தொடர்பில் மக்கள் வீண் அச்சமடைய வேண்டிய அவசியமில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் புதிதாக சிலர் கைது செய்யப்பட்டு அவர்களிடம் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் அடிப்படையில் மேலும் சிலருக்கு அழைப்பாணை விடுக்கப்படலாம். குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இம்முறை முறையாக விசாரணைகளை முன்னெடுத்து வருகிறார்கள் என்பது எதிர்த்தரப்பினரின் வீண் அச்சத்திலிருந்தே தெரிகிறது.

கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரை காணாமலாக்கிய சம்பவம் தொடர்பில் மாத்திரமே பிள்ளையான் கைதுசெய்யப்படாத நீங்கள் அறிந்து வைத்திருந்தாலும், அவருக்கு எதிராக மேலும் பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பல்வேறு சாட்சிகளும் கிடைத்து வருகின்றன. விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. அந்த விசாரணைகளின் முன்னேற்றங்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படும். எனவே, பேராசிரியரை காணாமலாக்கியது மாத்திரமே பிள்ளையான் செய்த ஒரே தவறு என்று தீர்மானம் எடுத்துவிட வேண்டாம். அவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. தடுப்புக்காவலில் வைத்து முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகின்றன. அவற்றில் ஒருசில சம்பவங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாகும். ஒருசில குற்றச்சாட்டுகள் மேல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புடையவையாகும். விசாரணைகளுக் கமைய இருவர் கைதுசெய்யப்பட்டும் இருக்கிறார்கள்.

எனவே, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை கோரிவந்த பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட தரப்பினரும் திருப்தியடையக்கூடியவகையில் விசாரணைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. விசாரணைகள் முறையாக இடம்பெறுகின்றன என்பதை திட்டவட்டமாக கூறமுடியும். உரிய நேரத்தில் பிரதான சூத்திரதாரிகளை வெளிப்படுத்துவோம். உதயகம்மன்பில போன்றவர்கள் அச்சம் கொள்கிறார்கள் என்பதற்காக அரசாங்கம் பதற்றமடையாது.

உதய கம்மன்பில பிள்ளை யானை சந்தித்துவிட்டு வெளியிட்ட கருத்தினூடாக எவ்வாறான தகவலை வழங்கினார் என்பது சமூக புரிந்துணர்வுள்ள சகலருக்கும் தெரியும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் எதனையும் கூறவில்லை என்றே கம்மன்பில கூறியுள்ளார். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்படுகிறார்கள் என்றால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் எதனையும் குறிப்பிடவில்லை என்று கூறுகிறார். கம்மன்பிலவின் அந்த தகவலிலுள்ள ஆழம் என்னவென்பதை குற்றப்புலனாய்வு விசாரணைகள் தொடர்பில் ஓரளவு ஞானம் இருப்பவர்களுக்கு புரியும். அது எங்களுக்கு அவசியமில்லை. இன்னும் சிறிது காலம் செல்லும்போது விசாரணைகளின் அடிப்படையில் இந்தச் சம்பவத்தின் பாரதூரம் எவ்வளவு காலத்திலிருந்து திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது தெரியவரும். அதுதொடர்பில் விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன'' என்றார்.

# தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 10ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்** எந்த வேலையையும் மிக எளிதில் முடிப்பீர்கள். சகாக்கள் மூலம் உதவிகளைப் பெறுவீர்கள்.

**ரிஷபம்** எதிர்கால வாழ்கைபற்றிய சிந்தைகளில் இருப்பீர்கள். நண்பரின் உதவியால் ஆனந்தமடைவீர்கள்.

**மிதுனம்** நீங்கள் எண்ணிய வெளிநாட்டுப் பயணம் நிறைவேறும். யாரையும் வீணே பகைத்துக்கொள்ளாதீர்கள்.

**கடகம்** உடலைக் கெடுக்கும் எந்த முயற்சியும் நன்மை தராது. கோபத்தை குறைத்துக் கொண்டால் இலாபம் உண்டு.

**சிம்மம்** காதல், திருமணம் கைகூடும். உல்லாசமாகவும் மகிழ்ச்சியாகவும் இன்றைய நாளைக் கழிப்பீர்கள்.

**கன்னி** சில விடயங்களுக்காக மற்றவர்களுக்கு நீங்கள் கட்டுப்பட்டே ஆக வேண்டும். டென்ஷன் வேண்டாம்.

**துலாம்** புத்திரர்களால் சற்று மனக்கவலை ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்புகளை நழுவ விடுவீர்கள்.

**விருச்சிகம்** குடும்பத்தில் மகிழ்ச்சியும் அன்பும் அமையும் நாள். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

**தனுசு** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும் நாள். புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்

**மகரம்** தேவையற்ற செலவுகளால் பணத்தை இழப்பீர்கள். வாய்வார்த்தைகளால் குழப்பங்கள் ஏற்படும்.

**கும்பம்** உடல் நலம் சீராக இருக்கும். நண்பர்கள் சந்திப்பால் நன்மைகள், உதவிகள் உண்டு.

**மீனம்** உங்கள் மதிப்பை நீங்களே கெடுத்துக் கொள்ளாதீர்கள். உணவு, உறக்கம் இன்றி சிரமப்படுவீர்கள்.

| | |
|---|---|
| **திதி** | : தசமி பி.ப.4.43 வரை பின் ஏகாதசி |
| **நட்சத்திரம்** | : அவிட்டம் பி.ப.12.07 வரை பின் சதயம் |
| **பிறை** | : தேய்பிறை |
| **யோகம்** | : அமிர்த யோகம் முழுவதும் |
| **வார சூலை** | : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| **நல்ல நேரம்** | : காலை 5.58 – 7.28 மணி வரை. காலை 8.58 – 9.58 மணிவரை. பகல் 1.28 – 2.58 மணி வரை மாலை 3.58 – 4.58 மணி வரை. |
| **ராகு காலம்** | : 11.58 – 1.28 மணி வரை |
| **எமகண்டம்** | : 7.28 – 8.58 மணி வரை |
| **குளிகை** | : 10.28 – 11.58 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : கடக ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 12.07 மணி வரை**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, புனர்பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம். பூரட்டாதி, ரேவதி

இன்று பிற்பகல் 12.07 மணிக்கு மேல்
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**விஷேட தினம்** :திருநாவுக்கரசு நாயனார்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# ஷாங்காய் நகராட்சி மக்கள் காங்கிரஸின் தூதுக்குழுவினர் சபாநாயகருடன் சந்திப்பு



சீனாவின் ஷாங்காய் நகராட்சி மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் துணைத் தலைவர் ஜாங் குவான் (Zhang Quan) தலைமையிலான தூதுக் குழுவினர் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவை நேற்று முன்தினம் (21) பாராளுமன்றத்தில் சந்தித்தனர். இதன்போது பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன, மக்களின் அபிலாஷைகளை நிலைநிறுத்துவதில் குறிப்பாக, ஊழல் எதிர்ப்பு, நல்லாட்சி மற்றும் ஜனநாயகத்தை மேம்படுத்துவதில் சட்டமியற்றும் அமைப்பாக இலங்கை பாராளுமன்றம் அர்ப்பணித்துள்ளதாக சுட்டிக்காட்டினார். இதன் ஒரு குறிப்பிடத்தக்க படியாக, நாட்டின் ஊழல் எதிர்ப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டமூலத்தை இலங்கை பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றியதாக அவர் குறிப்பிட்டார். அத்துடன், இலங்கைக்கும் சீனாவுக்குமிடையிலான நீண்டகால நட்புறவைப் பாராட்டிய சபாநாயகர், பல ஆண்டுகளாக சீனா வழங்கிவரும் தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

இது இலங்கைக்கான தனது முதல் விஜயம் எனக் குறிப்பிட்ட ஜாங் குவான், இலங்கை மக்கள் அளித்த அன்பான விருந்தோம்பலுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். கொழும்பு துறைமுக நகரத்துக்குத் தான் விஜயம் செய்ததாகத் தெரிவித்த அவர், இது இரு நாடுகளுக்கும் நீண்டகால மூலோபாய பெறுமதியைக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தித் திட்டமாகும் எனச் சுட்டிக்காட்டினார். அத்துடன், இரு நாடுகளுக்குமிடையே குறிப்பாக, ஷாங்காயுடன் விஞ்ஞானம், கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதே இந்த விஜயத்தின் நோக்கமென்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், விவசாயம், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் ஒத்துழைப்புகளை ஏற்படுத்துவது குறித்தும் இந்தச் சந்திப்பில் கவனஞ்செலுத்தப்பட்டதுடன், இத்துறைகளில் இருதரப்பு ஈடுபாட்டை மேலும் மேம்படுத்துவதிலும் இரு தரப்பினரும் மிகுந்த ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

# கொழும்பு மாநகர சபையின் வரலாறை இம்முறை லாந்தர் சின்னம் மாற்றியமைக்கும்

## நம்பிக்கை தெரிவிக்கிறார் கே.ரீ. குருசாமி



கொழும்பில் பெரும்பான்மையினத்தவருக்கு அடுத்தபடியாக வாழ்பவர்கள் தமிழர்கள். கடந்த வரலாறை எடுத்துக்கொண்டால் கொழும்பு மாநகர சபையில் ஒரு மேயராக அல்லது பிரதி மேயராக தமிழர் வரக்கூடிய சாத்தியம் அதிகமாக இருந்தபோதிலும் அது தவறவிடப்பட்ட நிலையில், இம்முறை மக்கள் எமது லாந்தர் சின்னத்துக்கு வாக்களித்தால்- கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கும் எந்தவொரு கட்சியும் எமது லாந்தர் சின்னத்தின் உதவியின்றி ஆட்சியமைக்க முடியாது என்ற நிலைமையை நீங்கள் அனைவரும் தருவீர்களானால் அந்த வரலாறை மாற்றியமைப்போம்'' - என லாந்தர் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு-04இன் தலைவரும் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான கே.ரீ.குருசாமி தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பில் 47 தொகுதிகளில் லாந்தர் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு-04இன் தலைவரும் மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான கே.ரீ.குருசாமி மற்றும் இணைத் தலைவர் பழ.புஸ்பநாதன் தலைமையில் குழுவின் தேர்தல் விஞ்ஞாபனமும் வேட்பாளர்கள் அறிமுகமும் கொழும்பில் நேற்று (22) நடைபெற்றது.

அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,உள்ளூராட்சித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை 75 சதவீதம் அநேகமான கட்சிகள் பூர்த்திசெய்துள்ள நிலையில், நாங்கள் இன்றுதான் (நேற்று)எமது பிரசாரத்தின் முதற்கட்டமாக எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுகின்றோம். அதற்கான காரணம் எங்களுடைய சுயேச்சைக் குழுவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட நிலையில், நாம் நீதிமன்றுக்குச் சென்று வெற்றிபெற்று, தேர்தலில் போட்டிடுவதற்கான சின்னத்தைப் பெற்று இன்று (நேற்று) பணிகளை ஆரம்பிக்கிறோம்.

கொழும்பு மாநகர சபைக்குப் போட்டியிடும் நாங்கள், முற்றிலும் சேவை மனப்பான்மையைக்கொண்ட ஆளுமைமிக்க வேட்பாளர்களுடன், ஒரு தமிழ் தனி அணியாக களமிறங்கியுள்ளோம். எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தின் கருப்பொருளாக "நல்லதையே செய்தோம் – நல்லதையே செய்வோம்" என்பதைக்கொண்டு எமது பிரசாரத்தை ஆரம்பிக்கிறோம்.

கொழும்பிலுள்ள 47 தொகுதிகளிலும் 66 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அதில் 47 உறுப்பினர்களை நாம் லாந்தர் சின்னத்தில் இணைத்துள்ளோம். ஒரு தொகுதிக்கு ஒருவர் என்ற முறைமையை மாற்றி ஒரு தொகுதியில் ஆகக் குறைந்தது 10 அல்லது 15 உறுப்பினர்களை சேவையாற்ற பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது. அவ்வாறு தெரிவுசெய்யப்படும் ஒவ்வொரு உறுப்பினரும் கொழும்பு 1 முதல் 15 வரையிலான அத்தனை தொகுதிகளுக்கும் சென்று சேவையாற்றுவார்கள் என்பது உறுதி.

கொழும்பில் பெரும்பான்மையினத்தவருக்கு அடுத்தபடியாக வாழ்பவர்கள் தமிழர்கள். கடந்த வரலாறை எடுத்துக்கொண்டால் கொழும்பு மாநகர சபையில் ஒரு மேயராக அல்லது பிரதி மேயராக தமிழர் வரக்கூடிய சாத்தியம் அதிகமாக இருந்தபோதிலும் அது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முறையாகப் பயன்படுத்தப்பட்டதா என்பது கேள்விக்குறி. மாற்று இனத்தவர்கள் எங்களுக்கு கிடைக்கவேண்டிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டு எங்களுக்கு கிடைக்க வேண்டிய அந்த மேயர் பதவி அல்லது பிரதி மேயர் பதவியைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் இம்முறை மக்கள் எமது லாந்தர் சின்னத்துக்கு வாக்களித்தால் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைக்கும் எந்தவொரு கட்சியும் எமது லாந்தர் சின்னத்தின் உதவியின்றி ஆட்சியமைக்க முடியாதென்ற நிலைமையை நீங்கள் அனைவரும் தருவீர்களானால் அந்த வரலாறை மாற்றியமைப்போம் - என்றார்.

# 10 பேர்ச்சஸ் காணியை உடன் வழங்க வேண்டும்

## திகாம்பரம் எம்.பி. கோரிக்கை

*(எஸ்.கணேசன்)*



''மலையக தமிழ் மக்கள் மீது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு உண்மையாகவுமே அக்கறை இருந்தால் 10 பேர்ச்சஸ் காணியை உடன் வழங்க வேண்டும்" - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஹட்டனில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் கைப்பற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஆனால், எதிரணியில் இருந்தபோது தாம் செய்வதாகக் கூறிய விடயங்களை ஆட்சிக்கு வந்த பிறகு தேசிய மக்கள் சக்தி செய்யவில்லை. வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

மலையகத் தமிழர்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் மீது இந்த அரசாங்கத்துக்கு உண்மையாகவே கரிசனை இருக்குமானால் உடனடியாக 10 பேர்ச்சஸ் காணியை வழங்க வேண்டும். அதனை வழங்குவதற்கு ஆட்சியாளர்கள் தயாரில்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா வழங்கப்படுமென 6 மாதங்களாகக் கூறிவருகின்றனர். ஆனால், எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும் மலையக மக்களுக்காக அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவோம்'' - என்றார்.

# பொலிஸ் காவலில் இருந்த நபரை வலுக்கட்டாயமாக விடுவிக்க முயன்ற இருவருக்கு 28வரை விளக்கமறியல்

*(ஹனபி எம். தாஸீம்)*

கடவத்தை பொலிஸ் நிலைய சிறையிலிருந்து சந்தேக நபரொருவரை பலாத்காரமாக மீட்க முயன்றதாகக் கூறப்பட்டு கைதுசெய்யப்பட்ட பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரையும் மற்றும் அவரது சக நண்பரொருவரையும் இந்த மாதம் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று முன்தினம் (21) உத்தரவிடப்பட்டுள்ளது.

மஹர எண் 01 நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொலிஸ் கான்ஸ்டபிளின் சக நண்பரை விளக்கமறியலில் வைக்க நீதவான் காஞ்சனா டி சில்வா உத்தரவிட்டார்.

இதற்கிடையில், ராகம பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதால் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் பொலிஸ் கான்ஸ்டபிளை பரிசோதித்து உத்தரவு பிறப்பிக்குமாறு வத்தளை நீதவானிடம் கோரிக்கைக் கடிதத்தை வழங்கிய கடவத்தை பொலிஸாருக்கு நீதவான் அனுமதி வழங்கினார்.

அதன்படி, வத்தளை நீதவான் டி. உடுவாவிதான, ராகம பொது மருத்துவமனைக்குச் சென்று சந்தேகத்துக்குரிய பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் பொலிஸ் கான்ஸ்டபிளை பரிசோதித்து இந்த மாதம் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

வேபொட கிழக்கில் வசிக்கும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் கோனஹேனாவில் வசிக்கும் அவரது சக நண்பரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# மறைந்த பாப்பரசர் ஒப்பற்ற தார்மீக மரபை விட்டுச் சென்றுள்ளார்

## ரவூப் ஹக்கீம் அனுதாபம்



உலகளாவிய ரீதியில் பெரிதும் செல்வாக்குமிக்கவராக மதிக்கப்பட்ட பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ், ஒப்பற்றதொரு தார்மீக மரபை விட்டுச்சென்றுள்ளதாகவும் அன்னாரின் மறைவையிட்டு ஆழ்ந்த கவலையடைவதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அனுதாபச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மறைந்த பாப்பரசர், இவ்வுலகில் வாழும் ஒரு பில்லியனுக்கும் அதிகமான கத்தோலிக்கர்களைக் கவர்ந்து ஈர்த்த ஆளுமை மிக்க ஆன்மீகத் தலைவராகத் திகழ்ந்தார். நீண்ட வரலாற்றைக் கொண்ட பாரம்பரியத்தில், ஐரோப்பியரல்லாத, லத்தீன் அமெரிக்கர் ஒருவரான அவரது பயணப் பாதையில் அடிமட்ட சமூகத்தவர்களுடன் அவர் பேணிவந்த அன்புத் தொடர்பு, வறுமை பற்றி அவருக்கிருந்த ஆழமான புரிதல் மற்றும் இளமை தொட்டே அன்னார் கடைப்பிடித்தொழுகிய தன்னலமற்ற வாழ்க்கை நெறி ஆகியவற்றால் நன்கு புடம்போடப்பட்டிருந்தார். பாவத்தில் உழன்ற மக்களைப் பற்றி அவர் பச்சாதாபப்பட்டார்.

பலஸ்தீனத்தில் காசாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள பேரழிவு மற்றும் காலநிலை மாற்றத்தால் நிகழ்ந்து வரும் நெருக்கடி நிலைமைகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி அவர் கரிசனை கொண்டிருந்தது மட்டுமல்ல, மறைவதற்கு முந்திய நாள் உயிர்த்த ஞாயிறன்று கூட, காசாவிலும் உலகெங்கிலும் அமைதிக்காக அழைப்பு விடுத்திருந்தார்.

முன்னதாக, காஸாவில் இஸ்ரேலின் இராணுவக் கெடுபிடிகளின் படுமோசமான விளைவுகளை 'இனப்படுகொலை' என அவர் கண்டித்திருந்தார். அந்தப் பரிதாப நிலைமையின் தீவிரத் தன்மையை அவர் சுட்டிக்காட்டி குறிப்பாக, அப்பாவி பச்சிளம் பாலகர்கள் மீது மேற்கொள்ளப்படும் குண்டுவீச்சுத் தாக்குதல்களை ஈவிரக்கமற்ற படுபாதகச் செயல்கள் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

பலஸ்தீன மக்கள் அனுபவிக்கும் துன்ப, துயரங்கள் மீது பலம் வாய்ந்த நாடுகள் கடைப்பிடிக்கும் அலட்சியப் போக்கையிட்டு அன்னார் கவலைடைந்திருந்தார். குண்டுவெடிப்புகளால் பல்வேறு விதங்களிலும் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி விசாரித்தறிவதற்கு அவர் கடந்த சில மாதங்களாக அடிக்கடி காசாவில் உள்ளவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தாகவும் கூறப்படுகின்றது.

அவரது மனிதாபிமான பார்வை கத்தோலிக்கர்கள் மீதும் கத்தோலிக்கர் அல்லாதவர்கள் மீதும் ஒருசேர படர்ந்திருந்தது. மோதல்கள் உக்கிரமடைந்துள்ள- மக்கள் வறுமையால் வாடுகின்ற பல ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அவர் நிலைமைகளை நேரில் அவதானித்திருந்தார். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், இவ்வுலகைவிட்டுப் பிரிந்துள்ள பரிசுத்த பாப்பரசரின் மறைவுத் துயரில் நாங்களும் பங்கேற்கின்றோம் என்றுள்ளது.

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு





*(பு.கஜிந்தன்)*

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கான தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

சபையின் மேனாள் தவிசாளரும் வேட்பாளருமான சுப்பிரமணியம் சுரேன் தலைமையில் நேற்று முன்தினம் (21) முள்ளிப்பற்று வட்டாரத்தில் நடைபெற்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டத்திலேயே தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கரைச்சி பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், கட்சியின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கான வேட்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# கிளீன் ஸ்ரீலங்காவுக்கான எமது பொறுப்பை நிறைவேற்றுவோம்

## ஸ்ரீ தலதா வழிபாட்டுக்கு வரும் பக்தர்களிடம் வேண்டுகோள்

புனித தலதா மாளிகைக்கு வழிபாட்டுக்காகச் செல்லும் பக்தர்கள் பொலித்தீன் உள்ளிட்ட உக்காத பொருட்களைக் கொண்டுசெல்வதைத் தவிர்க்குமாறும் தலதா மாளிகையைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழலின் தூய்மையைப் பராமரிப்பதில் அதிகபட்ச கவனஞ்செலுத்துமாறும் குப்பைகூளங்களை உரிய இடங்களில் மாத்திரம் கொட்டுவது தொடர்பில் கூட்டாகத் தலையீடு செய்து பிரஜைகள் என்ற வகையில் தமது பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமென 'கிளீன் ஸ்ரீ லங்கா' திட்டம் நினைவுகூர்ந்துள்ளது.

நாட்டில் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறைசார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சமூகத்தை உயர்ந்த நிலைக்கு உயர்த்தும் நோக்கத்துடன் அரசாங்கத்தின் பிரதான திட்டமாக 'கிளீன் ஸ்ரீ லங்கா' திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

குப்பைகூளங்களற்ற சுற்றுச்சூழலை உருவாக்குவதற்கும் குப்பைகளை முறையாக அகற்றும் நல்ல பழக்கத்தை ஏற்படுத்துவதற்கும் இந்தத் திட்டத்தின் கீழ் விசேடகவனஞ்செலுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ தலதா மாளிகை கண்காட்சியுடன் இணைந்து ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தை மையமாகக் கொண்டு 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

# மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் குளத்தில் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

*(ரஸீன் ரஸ்மின்)*

புத்தளம் - மன்னார் வீதியின் நான்காம் கட்டைப் பகுதியிலுள்ள விலுக குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில் தவறுதலாக குளத்துக்குள் வீழ்ந்து நீரில் மூழ்கி குடும்பஸ்தரொருவர் நேற்று முன்தினம் (21) உயிரிழந்துள்ளார்.

புத்தளம் - மன்னார் வீதியின் நான்காம் கட்டை விலுக பகுதியைச் சேர்ந்த எச்.ஹஸீம் அஹ்மட் (வயது 36) எனும் குடும்பஸ்தரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற தினம் குறித்த நபர் தனது நண்பருடன் இணைந்து புத்தளம் - விலுக குளத்தில் மீன்பிடிப்பதற்காகச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த குளத்தில் வழமைக்கு மாறாக நீர் அதிகரித்துக் காணப்படுவதாகவும் குளம் முழுவதுமாக தாமரை காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த குறித்த நபர் திடீரென குளத்துக்குள் வீழ்ந்து காணாமல் போயுள்ள நிலையில், அங்கிருந்தவர்கள் உடனடியாக அவரை மீட்டு புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதித்துள்ள போதிலும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் தாமரை இலைகள் சூழ்ந்துகொண்ட குறித்த குளத்தில் சுமார் 20 அடி ஆழமுள்ள நீருக்குள் வீழ்ந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸாருக்கும் புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரிக்கும் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து, புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிஸாம், சம்பவ இடத்திலும் வைத்தியசாலையிலும் மரண விசாரணையை முன்னெடுத்தார்.

உயிரிழந்தவரின் ஜனாஸா பிரேத பரிசோதனையின் பின்னர் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பு வழங்கி மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.ள

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஏப்ரல் 23 ஆம் திகதி, புதன்கிழமை

# மீள்பரிசீலனை செய்வாரா ட்ரம்ப்?

அமெரிக்க – சீன வர்த்தகப் போர் காரணமாக அதிகரித்து வரும் பதற்றம் உலகிலுள்ள பல நாடுகளுக்குப் புதிய வாய்ப்புகளுக்கான சாத்தியங்களை உருவாக்கியுள்ளது.

கடந்த சில வாரங்களாக உலகப் பொருளாதாரம் பெரும் கொந்தளிப்பைச் சந்தித்திருக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஏப்ரல் 02 ஆம் திகதி 'சர்வதேச அவசரப் பொருளாதார அதிகாரச் சட்டம்' என்கிற சட்டத்தை அமுல்படுத்தி, ஒரு சர்வதேச வர்த்தகப் போரைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்.

புதிய இரண்டு அடுக்கு வரி விதிப்பு முறை ஏப்ரல் 05, ஏப்ரல் 09ஆம் திகதிகளில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது. சீனா ஒரு சிறப்பு இலக்காக இருந்தது. சீனாவின் இறக்குமதிகள் மீது மிகப்பெரிய வரி விதிக்கப்பட்டது. ஏப்ரல் 11இல் சீனப் பொருட்களின் மீதான அமெரிக்காவின் 145 சதவீத வரி அமுலுக்கு வந்தது. இதற்கிடையில், இந்தியா போன்ற அமெரிக்காவின் உற்பத்தி மையங்கள் 27% அதிகரிப்புக்கு ஆளாகின. அதேநேரத்தில், இந்தோனேஷியா (32%), பங்களாதேஷ் (37%), வியட்நாம் (46%), இலங்கை (44 %) ஆகியவை கடுமையான வரிகளை எதிர்கொண்டன.

தற்போதைய உலகமயமாக்கல் சூழலில் அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக, வெளிநாடுகளில் உள்ள அமெரிக்க நிறுவனங்களை அமெரிக்காவில் உற்பத்தி செய்ய அழைத்து வருவதைத்தான் பாதுகாப்புவாத முழக்கமாக ட்ரம்ப் மாற்றியமைத்தார். அதற்காக அவருக்கு வர்த்தக வரிகள் என்கிற பாதுகாப்புக் கவசம் தேவைப்பட்டது.

2017 முதல் 2021 வரையான தனது முதல் பதவிக் காலத்தில் சூரிய மின்சக்தித் தகடுகள் முதல் சலவை இயந்திரங்கள் வரை அனைத்துக்கும் இறக்குமதி வரிகளை அதிகரித்தார். அந்தக் காலகட்டத்தில் அமெரிக்க சோயாபீன்ஸ் மீதான வரிகளை அதிகரிப்பதன் மூலம் சீனா அப்போது பதிலடி கொடுத்தது. இது அமெரிக்க விவசாயிகளைப் பாதித்தது. இப்போது, இரண்டாவது பதவிக் காலத்தைத் தொடங்கியவுடன் ட்ரம்ப் அதே பாதுகாப்புவாதப் பொருளாதார உத்தியின் அளவை விரிவுபடுத்தியுள்ளார். தற்போதைய சூழலில் சர்வதேச வர்த்தகத்தின் உள்ளார்ந்த தர்க்கம், அமெரிக்காவில் அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவது என்கிற பாதுகாப்புவாதத்தைச் செல்லாததாக்குகிறது.

ஏனெனில், இறக்குமதி வரி வீதங்கள் அதிகரித்தாலும்கூட, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உற்பத்திசெய்து அமெரிக்காவில் விற்பனை செய்யும் அமெரிக்க நிறுவனங்கள், அந்தந்த நாடுகளில் உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதன் மூலமோ உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலமோ தங்கள் இலாபத்தை அதிகரிக்க முடியும். எனவே, இந்தப் புதிய இறக்குமதி வரிக் கொள்கை உலகளாவிய உற்பத்திக் கட்டமைப்பை அமெரிக்காவுக்கு மாற்றும் என்கிற வாதம் நடைமுறைக்கு மாறானது. ஆனால், இவையெல்லாம் இந்த வர்த்தகப் போரை ட்ரம்ப் இடைநிறுத்த வைத்த காரணங்கள் அல்ல.

ஏப்ரல் 02ஆம் திகதி முதல், அமெரிக்கப் பங்குச் சந்தைகளும் உலகச் சந்தைகளும் மிகவும் நிலையற்றவையாக இருந்தன. ஏப்ரல் 07ஆம் திகதி எஸ் & பி 500 குறியீடு 12%க்கும் மேல் சரிந்தது. அப்போதும்கூட ட்ரம்ப் கவலைப்படாமல் இருந்தார். ஆனால், அந்த வாரத்தில் அமெரிக்கத் திறைசேரியின் பத்திரச் சந்தையில் (US Treasury Bonds) ஏற்பட்ட எதிர்வினைகள் அவரது மனதை மாற்றின. பொதுவாக, பங்குச் சந்தை வீழ்ச்சியடையும் போது, முதலீட்டாளர்கள் அமெரிக்கத் திறைசேரி பத்திரங்களை (டி-பத்திரங்கள்) வாங்குவார்கள்.

ஏனெனில், அமெரிக்கத் திறைசேரி பத்திரங்கள் தவறுகள் நிகழாத, உத்தரவாதமான, நிலையான வருவாய் வீதப் பத்திரங்களாகக் கருதப்படுகின்றன. எனவே, டி-பத்திரங்களுக்கான அதிக தேவை அமெரிக்க டொலரை வலுப்படுத்தும். ஆனால், இந்தத்தடவை டி-பத்திரங்களின் விலை குறைந்து பத்திரம் வாங்கும் வீதம் அதிகரித்தது. குறிப்பாக, ஏப்ரல் 04 - 11ஆம் திகதிகளுக்கிடையில், 10 ஆண்டு, 20 ஆண்டு, 30 ஆண்டு டி-பத்திரங்களின் வாங்கும் வீதம் முறையே 5.5%, 5.05% மற்றும் 5% ஆக உயர்ந்தது.

இதற்குக் காரணம், வர்த்தகப் போர் அமெரிக்காவில் பணவீக்கத்தையும் வளர்ச்சித் தேக்கத்தையும் ஏற்படுத்துமென்று எதிர்பார்த்ததால், முதலீட்டாளர்கள் அமெரிக்கப் பத்திரங்களை விற்று, மற்ற பாதுகாப்பான முதலீடுகளுக்குச் சென்றனர் (ஜெர்மன் பத்திரங்கள்). எனவே, டி-பத்திர விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி அமெரிக்க நிர்வாகத்துக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியது.

ஏப்ரல் 08ஆம் திகதி அமெரிக்க அரசாங்கம் 3 ஆண்டு டி-பத்திரங்களை 58 பில்லியன் டொலர் மதிப்புள்ள ஏலத்தில் விற்பதாக அறிவித்தது. முக்கிய முதலீட்டாளர்களான ஹெட்ஜ் நிதிகள் (Hedge Funds), வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் (FII) பத்திரங்களை வாங்க முன்வரவில்லை.

ஹெட்ஜ் நிதிகள் அமெரிக்க டி-பத்திரங்களில் ரிவேட்டிவ் வர்த்தகத்துக்காக 800 பில்லியன் டொலர் தொகுப்பு முதலீட்டை (portfolio) வைத்திருக்கின்றன. எனவே, அவை டி-பத்திரங்களை விற்கத் தொடங்கியபோது, இந்தச் சந்தைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி டி-பத்திர விலைகளில் வீழ்ச்சியைத் தீவிரப்படுத்தியது.

டி-பத்திர விலைகளின் இந்தச் சரிவு, அமெரிக்க நிர்வாகத்துக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. ஏனெனில், டி-பத்திரங்களின் விலைகளில் ஏற்படும் சரிவு அமெரிக்க டொலரின் மதிப்பிலும் வீழ்ச்சிக்கு வழிவகுக்கிறது. இதனால், டி-பத்திரத்தின் விலையில் ஏற்படும் வீழ்ச்சி (அல்லது அதன் வாங்கும் வீதத்தில் ஏற்படும் உயர்வு) யூரோ போன்ற பிற நாணயங்களுக்கு முதலீட்டாளர்களை மாற்றிவிடும்.

மற்றைய நாட்டுப் பத்திரங்களை வாங்குவது அமெரிக்க டொலரின் மீதான நம்பிக்கை இழப்பைக் குறிக்கிறது. உலகின் 'இருப்பு நாணய'மாக (Reserve currency) அமெரிக்க டொலர் பலவீனமடைவதற்கான அறிகுறியாக டி-பத்திரச் சந்தையில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு பார்க்கப்படுகிறது.

ட்ரம்ப்பின் வரிக் கொள்கையின் முரண்பாடுகள் அவருக்கு டி-பத்திரச் சந்தையால் காட்டப்பட்டன - அமெரிக்காவுக்கு வேலைகளைத் திரும்பக் கொண்டுவருவதற்கான வர்த்தக வரிப் போரின் விலை, உலகின் இருப்பு நாணயமாக இருக்கும் அமெரிக்க டொலரின் அபரிமிதமான சலுகையை இழக்க வைத்துவிடும்.

அத்தகைய நிலை, அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக மாற்றுவது என்கிற ட்ரம்ப்பின் அரசியல் முழக்கத்தின் அடித்தளத்தையே சீர்குலைக்கிறது. நிச்சயமற்ற தன்மை இன்னும் தீரவில்லை. ஆனால், பத்திரச் சந்தையில் ஏற்பட்டுள்ள இந்தச் சீற்றம் பொருளாதாரத்தை நிர்வகிப்பதில் ட்ரம்ப்புக்கு உள்ள எல்லையை வரையறுத்துக் காட்டியுள்ளதென்பது மட்டும் தெளிவாகிறது.

இவ்வாறான நிலைமையில், ட்ரம்ப் தனது தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யக்கூடும். மக்கள் எதிர்ப்பும் உள்நாட்டில் எழுந்துள்ளதால் அவற்றை எதிர்கொள்ள சில விடயங்களை அவர் மறுபரிசீலனை செய்யக்கூடும். ஆனாலும் அந்த மீள்பரிசீலனையில் கூட இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் புறக்கணிக்கப்படாமல் இருத்தல் வேண்டும்.

# நினைவாற்றலை வளர்க்கும் எழுத்துப்பயிற்சி




-ஐ.வி.நாகராஜன்-

நினைவாற்றல் என்பது தான் அனுபவித்த, கற்றறிந்த விஷயங்களைத் தேவைப்படும்போது மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவரும் ஒரு செயற்பாடாகும். நினைவாற்றல் அதிகம் உள்ளவர்களுக்கு தன்னம்பிக்கையும் அதிகமாக இருக்கும். பலருக்கும் பல விஷயங்கள் நினைவில் இருக்கும். எனினும், உரிய நேரத்தில் குறிப்பிட்ட விஷயத்தை நினைவுக்குக் கொண்டுவர முடியாமல் தவிப்பார்கள். இவ்வாறு தேவைப்படும் நேரத்தில் தேவையான செய்திகளை உடனடியாக நினைவுக்குக் கொண்டு வரமுடியாமல் இருப்பதையே ஞாபக மறதி என்கிறோம்.

இன்றைய உலகில் குழந்தைகள் போட்டி நிறைந்த சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். போட்டிகளும் கல்வியால் ஏற்படும் அழுத்தமும் குழந்தைகளின் உலகைச் சுருங்கச் செய்துவிட்டன. இதனால் ஞாபக மறதி ஏற்பட்டு நினைவாற்றல் திறன் குறைகிறது.

நினைவாற்றல் குறைவதற்குப் பல அடிப்படைக் காரணங்கள் உள்ளன. குறிப்பாக, மூளை வளர்ச்சிக் குறைவு, மன அழுத்தம், பதற்றம், பல பிரச்சினைகள் குறித்த கவலை போன்ற பல காரணங்களைச் சொல்லலாம். இருந்தபோதிலும் சில எளிய வழிமுறைகளை மேற்கொள்வதன்மூலம் சிறந்த நினைவாற்றல் திறனை வளர்த்துக் கொள்ளமுடியும்.

மனிதனின் நினைவாற்றலுக்கும் மனதை ஒருநிலைப்படுத்துதலுக்கும் நெருங்கிய தொடர்புள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர். நாம் மனதை எந்தளவுக்கு ஒரு நிலைப்படுத்தி, குறிப்பிட்ட விஷயங்களில் கவனத்தைச் செலுத்துகிறோமோ அந்தளவுக்கு அது மனதில் பதிந்துவிடுகிறது. எனவே, நினைவாற்றலை அதிகப்படுத்துவதற்கான முதல்படியாக கவனச் சிதறல்களுக்கான காரணங்களைக் கண்டறிய வேண்டும். அவற்றைச் சரி செய்து மனதை ஒருநிலைப்படுத்த வேண்டும்.

நிறைய பாடச்சுமை உள்ள இந்நாளில் மாணவர்கள் அதிக நினைவாற்றல் உடையவர்களாக இருக்கவேண்டியிருக்கிறது. நினைவாற்றல் அதிகமிருந்தால்தான் அதிக மதிப்பெண்கள் எடுக்க முடியும். நேர்காணல்களிலும் சரியான விடையளிக்க முடியும். எனவே, மாணவர்கள் நினைவாற்றலை வளர்க்கவேண்டிய கட்டாயம் உள்ளது.

யோகாசனம், உடற்பயிற்சி, தொடர்ந்து வாசிப்பது, எழுத்துப்பயிற்சி போன்றவற்றின் மூலமாக மனதை ஒருநிலைப்படுத்த முடியும். மன அழுத்தத்தையும் குறைக்க முடியும்.

மாணவர்கள் மூளைக்கு சில பயிற்சிகளை அளிக்க வேண்டும். அதாவது, குறுக்கெழுத்துப் போட்டி, எண்புதிர்க் கணக்கு, அயல் மொழிகளைக் கற்றல் போன்ற சில பயிற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதன் மூலமும் சிறந்த நினைவாற்றலைப் பெற முடியும். நினைவாற்றலை வளமாக்குவதில் நம் உணவு முறைக்கும் பங்குண்டு. நினைவாற்றலை அதிகப்படுத்தும் உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். முடிந்தவரை காலை உணவைத் தவிர்க்காமல் குறைவான அளவிலாவது எடுத்துக் கொள்ள வேண்டும். பழங்களை உண்ணுதல், வல்லாரை, தூதுவளை போன்ற கீரை வகைகளை உணவாக எடுத்துக்கொள்ளுதல் நினைவாற்றலை அதிகரிக்குமென்று மருத்துவ ரீதியாகச் சொல்லப்படுகிறது. மாணவர்கள் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பொதுவாக எந்தளவுக்குப் பயிற்சி செய்கிறோமோ அந்தளவுக்குத் தகவல்களை நினைவுபடுத்தும் திறன் வலுவானதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். அதேசமயம், ஒரு மாணவரின் நீண்ட கால நினைவகத்தில் சேமிக்கப்பட்டு தினந்தோறும் ஒரு தகவல் தக்கவைக்கப்பட்டாலும் அது எப்போதும் அப்படியே இருக்குமென்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. பயன்படுத்தப்படாத நினைவுகள் தொலைந்து போகலாம் அல்லது மீட்டெடுக்க முடியாமலும் போகலாம்.

மாணவர்கள் தங்களுடைய கற்றலை மதிப்பிடுவதற்கும் கற்றுக்கொள்வதற்கும் தேவையான பயிற்சிகளைச் செய்வது மிக அவசியம். மாணவர்கள் தங்களுடைய கற்றல் தேவைகளுக்கேற்ற அட்டவணையைத் தயார் செய்து கொண்டு அதன்படி முறையாகச் செயற்பட்டால் நினைவாற்றலை வலுப்படுத்த முடியும்.

நினைவாற்றலை வளர்க்க எழுத்துப்பயிற்சிகளைச் செய்வது ஒரு சிறந்த வழியாகும். குறிப்புப் புத்தகங்கள், நாட்குறிப்புகள், கடிதங்கள், கட்டுரைகள் போன்றவற்றை எழுதுவதன் மூலம் நினைவாற்றலை மேம்படுத்த முடியும். எழுதும்போது, மாணவர்களாகிய நீங்கள் படிக்கும் தகவல்களை மூளையில் பதிய வைக்கிறீர்கள்; அது தொடர்பாகச் சிந்திக்கவும் செய்கிறீர்கள். எழுதுவது மூளையில் ஒரு வலுவான தொடர்பை உருவாக்குகிறது. தகவல்களைப் பகுப்பாய்வு செய்து ஒழுங்குபடுத்துவதற்கு உதவுகிறது. அதோடு உங்கள் புரிந்துகொள்ளும் திறனையும் மேம்படுத்துகிறது. தகவல்களை ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்வது, மனதை ஒருமுகப்படுத்துவதற்கு உதவுகிறது. அதுமட்டுமல்லாமல், புதிய சிந்தனைகளையும் தூண்டு கிறது.

தினமும் ஒரு குறிப்புப் புத்தகத்தில் அல்லது நாட்குறிப்பில் ஏதாவது ஒரு விஷயத்தை எழுதுங்கள். நீங்கள் படிக்கும் பாடங்களின் முக்கிய கருத்துகளை எழுதிக்கொள்ளுங்கள். நீங்கள் கற்றதைச் சுருக்கி எழுதுவதன் மூலம், நீங்கள் எவ்வளவு கற்றிருக்கிறீர்கள் என்பதை அறிய முடியும். நீங்கள் பயன்படுத்தாத புதிய சொற்களைப் பயன்படுத்தி எழுதுங்கள். எழுத்துப்பயிற்சி செய்து கொண்டே இருந்தால், உங்கள் நினைவாற்றல் மேம்படும். எழுதுவதற்கு முன், உங்கள் மனதில் உள்ள மற்ற விஷயங்களை ஒதுக்கி வைத்து, எழுதும் விஷயத்தின் மீது மட்டும் கவனம் செலுத்துங்கள்.கையால் எழுதும் இந்தப் பயிற்சி உங்கள் நினைவாற்றலை மேம்படுத்துவதற்கும் கற்றலை எளிதாக்குவதற்கும் ஒரு சிறந்த வழியாகும்.

தட்டச்சு செய்வதென்பது, காகிதத்தில் எழுதுவதைவிட வேகமானது என்பது மறுக்க முடியாத உண்மைதான். அதேநேரத்தில், ஆசிரியர் அல்லது விரிவுரையாளர் சொல்லும் தகவல்களை குறிப்புகளாக மனதில் பதித்து, அதன் பின்னர் தட்டச்சு செய்வதன் மூலம் அவர்கள் கூறும் தகவல்களை நீங்கள் அதிகமான வார்த்தைகளில் பதிவேற்றலாம். உங்கள் நினைவாற்றலும் மேம்படும்.

ஆனால், கையெழுத்தைப் பொறுத்தவரை இந்தச் செயல்முறை சற்றுக் கடினமானதாகவும் மெதுவாகவும் இருக்கும். ஆனால், அது உங்களுக்கு ஒரு பயிற்சியாக அமைந்து நினைவாற்றலைப் பலப்படுத்தும். ஆகவே, கற்றதை நினைவில் நிலை நிறுத்த எழுத்துப் பயிற்சி மிகச்சிறந்த வழிமுறையாகும்.


நன்றி - தினமணி

## இன்றைய நாளில்...

- 1867 – சக்கரம் ஒன்றில் படங்களைச் செருகி தொடர் படமாகக் காட்டக்கூடிய சோயிட்ரோப் (zoetrope) என்ற கருவிக்கான காப்புரிமத்தை வில்லியம் லிங்கன் என்பவர் பெற்றார்.
- 1905 – யாழ்ப்பாணத்துக்கு முதன் முதலில் தானுந்து கொண்டுவரப்பட்டது.
- 1966 – முதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் நிறைவடைந்தது.
- 1967 – சோவியத்தின் சோயுஸ் 1 விண்கலம் விளாடிமிர் கொமொரோவுடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1993 – பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.
- 2005 – முதலாவது யூடியூப் காணொளி 'ஜாவெட்'என்பவரால் வெளியிடப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

செவ்வந்தி , தேசபந்து , பிரசன்ன ரணவீர எல்லோரையும் மக்கள் மறந்திட்டாங்களோ?



# ஐஸ் – ஹெரோயின் மாத்திரைகளுடன் இளைஞரொருவர் அநுராதபுரத்தில் கைது



(அநுராதபுரம் நிருபர்)

ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஹெரோயின் போதை மாத்திரைகளுடன் 24 வயதுடைய இளைஞன் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அநுராதபுரம் முகாம் அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் (21) அநுராதபுரம் பொலிஸ் பிரிவின் அநுராதபுரம் பொது வர்த்தக சந்தை பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது ஐஸ் போதைப்பொருள் 05 கிராம் 120 மில்லிகிராம், ஹெரோயின் போதைப்பொருள் ஒரு கிராம் 250 மில்லிகிராம் 390க்கும் மேற்பட்ட போதை மாத்திரைகளையும் நான்கு கையடக்கத் தொலைபேசிகள், போதைப்பொருள் விற்பனை மூலம் ஈட்டிய 25,000 ரூபா பணம் என்பவற்றை கைப்பற்றியதுடன் சந்தேக நபரை பொலிஸ் அதிரடிப்படை அநுராதபுரம், உளுக்குளம் முகாம் அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் 24 வயதுடைய அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக வேண்டி சந்தேகநபரை அதிரடிப்படையினர் அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவில் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டுநாயக்கவில் துப்பாக்கிச் சூடு – ஒருவர் கைது

கட்டுநாயக்க, ஆண்டியம்பலம பகுதி யில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்று (22) காலை 09.30 மணியளவில் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.மோட்டார் சைக்கிளில் வந்த அடை யாளம் தெரியாத நபர்கள் இருவர் ரீ-56 ரக துப்பாக்கிகளுடன் ஒரு வீட்டுக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்களில் ஒருவருடைய துப்பாக்கி செயலிழந்ததால், சம்பவ இடத்தை விட்டு அவர் தப்பிச் சென்றுள் ளார்.

மற்றைய சந்தேக நபர் வீட்டினுள் சிக்கிக் கொண்ட நிலையில், சுவர் ஏறி குதித்து தப்பிக்க முயன்றபோது, அவர் விழுந்ததில் அவரது இரண்டு கால்களிலும் பலத்த காயம் ஏற்பட்டது.

சம்பவத்தின்போது, உள்ளூர்வாசிகள் சம்பவ இடத்தில் கூடியிருந்த நிலையில், சந்தேக நபர் தன்னிடம் இருந்த துப்பாக் கியால் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

இருப்பினும், துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் நீர்கொழும்பு மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த துப்பாக்கிச் சூட்டில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்று பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

# மறைந்த பாப்பரசருக்கு வவுனியாவில் அஞ்சலி




வவுனியா தமிழர்தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேற்று (22) பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கத்தோலிக்க திருச்சபையின் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் வத்திகானில் நேற்று முன்தினம் (21) இறைவனடி சேர்ந்தார்.

அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பல்வேறு பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றன. அந்தவகையில் வவுனியா தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் அஞ்சலி செலுத்தப்பட்டது.


அவர்கள் தொடர்போராட்டம் மேற்கொண்டு வரும் வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக உள்ள கொட்டகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது அன்னாரது திருவுருவப் படத்துக்கு ஒளிதீபம் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

பாப்பரசரின் மறைவையொட்டி துயரடைந் திருக்கும் உலக கிறிஸ்தவ மக்களின் துயரத்தில் நாங்களும் கலந்துகொள்கின்றோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# எகிறியது தேர்தல் விதிமீறல்கள்

## இதுவரை 2,167 முறைப்பாடுகள் பதிவு



உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில், இதுவரை 2,167 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், 11 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 156 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறைச் சம்பவம் 02 பதிவாகியுள்ளது என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாக கிடைக்கப்பெற்றுள்ளன. அது 1,994ஆக பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில், இதுவரையான முறைப்பாடுகளில் 1,774 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 393 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.




# அமைச்சரவை முடிவுகள்

**01. அரச தனியார் பங்குடைமையின் கீழ் நீரோட்டங்களைப் பயன்படுத்தி சுற்றுலா மற்றும் பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளை மேம்படுத்தல்.**

இலங்கையானது நீர்மூலங்கள் மற்றும் நீரோட்டங்களுடன் கூடிய தீவாக இருப்பதால் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காகவும் நகர்ப்புற பிரயாணிகள் போக்குவரத்துக்காகவும் குறித்த நீர்மூலங்கள் மற்றும் நீரோட்டங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்தலாம். அதனால் எமது நாட்டின் கடலோரத்தையும் நாட்டின் உள்ளகரீதியாகக் காணப்படும் நீரோட்டங்களையும் பயன்படுத்தி ஒருசில பிரதேசங்களை உள்ளடக்கி படகுச் சேவைகளை ஆரம்பிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கிணங்க புத்தளம் - கோட்டை, கோட்டை - காலி, காலி - மாத்தறை கடல்வழிப் போக்குவரத்துச் சேவைகளை ஆரம்பிப்பதற்கும் அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதன் மூலம் சுற்றுலாத்துறை மேம்பாடு மற்றும் பயணிகள் போக்குவரத்துக்கான வசதிகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் ஹமில்டன் கால்வாய், பேர வாவி, தியவன்னா ஓயா மற்றும் மாது கங்கை போன்ற ஆற்றல் வளங்களைப் பயன்படுத்தி உள்ளக நீர்வழிப்போக்குவரத்து வசதிகளை வழங்குவதன் மூலம் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கிணங்க, குறித்த கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக சாத்தியவளக் கற்கைகளை மேற்கொள்வதற்கும் அதன் பெறுபேறுகள் அடிப்படையில் அரச - தனியார் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாக உத்தேச கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காகவும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. "உங்களுக்கொரு வீடு - நாட்டுக்கு எதிர்காலம்" வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் வீடொன்றுக்கு வழங்குகின்ற உதவு தொகையை அதிகரித்தல்**

வறிய அல்லது குறைந்த வருமானம் கொண்டவர்களின் வீட்டுப் பிரச்சினைக்கும் அதுசார்ந்த வறுமையைக் குறைக்கும் நோக்கில் "உங்களுக்கொரு வீடு - நாட்டுக்கு எதிர்காலம்" வீடமைப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் வறுமை அல்லது குறைந்த வருமானம் கொண்ட ஒரு குடும்பத்துக்கு முன்னுரிமை வழங்கி அடையாளங் காணப்பட்ட வீடொன்றை நிர்மாணிப்பதற்காக/மேம்படுத்துவதற்காக கட்டுமான முன்னேற்ற அடிப்படையில் உதவு தொகையொன்று வழங்கப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட பயனாளியொருவர் குறைந்தபட்சம் 550 சதுரஅடி வீடொன்றை அமைக்க வேண்டியதுடன் அதற்காக அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 650,000 ரூபா உதவுதொகைக்கு மேலதிகமாக எஞ்சிய தொகை குறித்த பயனாளியால் பங்களிப்புச் செய்ய வேண்டும். வேலைத்திட்டம் ஆரம்பத்தில் ஒரு வீட்டுக்கான மதிப்புச்செலவு 1,147,000 ரூபாவாக இருப்பினும் தற்போது குறித்த செலவு 1,764,000 ரூபாவாக அதிகரித்துள்ளது. அரசின் உதவுதொகைக்கு மேலதிகமாக எஞ்சிய தொகையை பங்களிப்புச் செய்வதற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்ற பயனாளிகளின் பொருளாதார நிலைமைக்கு அமைய இயலுமை இன்மையால் தற்போது வீடொன்றுக்கு வழங்கப்படுகின்ற 650,000ரூபாவான அரச உதவு தொகையை 1,000,000ரூபா வரை அதிகரிப்பதற்காக நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கான தரையிறக்க சேவை விநியோகத்துக்கான ஒப்பந்தத்தை வழங்கல்**

அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கான தரையிறக்க சேவை விநியோகத்துக்கான ஒப்பந்தம் 2025.06.30 அன்றுடன் முடிவடை யவுள்ளது. ஆகவே, எதிர்வரும் 03 ஆண்டுகளுக்கான தரையிறக்க சேவைகளை வழங்குவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளது. அதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நான்கு (04) விலைமனுக்களை மீளாய்வு செய்த பின்னர், குறித்த ஒப்பந்தத்தை Dnata Airport Services Prty Limited இற்கு வழங்குவதற்கு உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழு விதந்துரைத்துள்ளது. அதற்கிணங்க, மெல்பர்ன் விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கான தரையிறக்க சேவை விநியோகத்துக்கான (விமானப் பயணிகள், தரையிறக்க சேவைகள் மற்றும் பொருட்கள் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கைகள்) ஒப்பந்தத்தை 13,124,402 அவுஸ்திரேலிய டொலர் மதிப்பீட்டுச் செலவுக்கு குறித்த கம்பனிக்கு வழங்குவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்துக்குச் சொந்தமான, காரைநகர் படகு கட்டும் தளத்தை மறுசீரமைப்புச் செய்தல்**

ஜனாதிபதி 2024 டிசம்பர் மாதம் இந்தியாவுக் கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது காரைநகர் படகு கட்டும் தளத்தை மறுசீரமைப்புச் செய்வதற்கு, இந்திய அரசின் நன்கொடையைப் பெற்றுக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் கருத்திட்டத்துக்கான தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்கான பொறுப்பும் மற்றும் குறித்த நன்கொடைக்கான பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கான வரி விடுவிப்புகளுக்கான பொறுப்பும் இலங்கை அரசுக்கு ஒப்படைக் கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, குறித்த கருத்திட்டத்தின் ஆலோசகராக பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனைப் பணியகத்தின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் இலங்கை அரசால் பொறுப் பேற்கின்ற செலவுகளுக்காக 40 மில்லியன் ரூபாக்களை திறைசேரியிலிருந்து ஒதுக்கீடு செய்வதற்கும் கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித் துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. சூதாட்ட விளையாட்டுகள் ஒழுங்கு படுத்தல் அதிகாரசபையை நிறுவுதல்**

கப்பல்களிலும் கொழும்பு துறைமுக நகரத்தில் கரைகடந்த சூதாட்ட விளையாட்டுச் செயற்பாடுகள் மற்றும் நிகழ்நிலையில் இடம்பெறும் சூதாட்ட விளையாட்டுச் செயற்பாடுகள் உள்ளிட்ட இலங்கையில் சூதாட்ட விளையாட்டுத் தொழிற்றுறையை இயக்குவதற்கான விரிவான மற்றும் முழுமையான விடயதானத்துடன் கூடிய சுயாதீன இயக்குநராகச் செயற்படுவதற்கு சூதாட்ட விளையாட்டுகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2025.02.24 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் பிரகாரம் சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கிணங்க, சூதாட்ட விளையாட்டுகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06.மின்கல உதவியுடன் இயங்கும் இலத்திர னியல் முச்சக்கர மோட்டார் ஊர்திகளைப் பதிவு செய்வதற்கான சட்ட ஏற்பாடுகளை வகுத்தல்**

மின்கல உதவியுடன் இயங்கும் இலத்திரனியல் முச்சக்கர மோட்டார் ஊர்தி உற்பத்தியின் போதும், பெற்றோல் அல்லது டீசல் எரிபொருட்களில் இயங்குகின்ற முச்சக்கர மோட்டார் ஊர்திகளை இலத்திரனியல் முச்சக்கர மோட்டார் ஊர்திகளாக மாற்றியமைக்கும் போதும் மின்கலம் பயன்படுத்துவதால் அவ்வாறான முச்சக்கர மோட்டார் ஊர்திகளின் நிகர எடை அதிகரிக்கின்றது. இதனால், குறித்த முச்சக்கர மோட்டார் ஊர்திகளைப் பதிவு செய்யும்போது ஏற்படுகின்ற பொருள்கோடல்களை நிவர்த்தி செய்வதற்காக முச்சக்கர மோட்டார் ஊர்தியின் உயர்ந்தபட்ச நிகர எடை 600 கிலோகிராமாக மோட்டார் வாகனங்கள் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2022.08.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், ஒருதடவை மின்னேற்றத்தில் அதிக தூரம் பயணிக்கக்கூடிய மின்கலத்தை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை, வளிச்சீராக்கி பொருத்தப்பட்ட முச்சக்கர மோட்டார் ஊர்திகளுக்கான அதிகொள்ளளவு கொண்ட மின்கலத்தொகுதியின் தேவை, மற்றும் இலத்திரனியல் விசையுடன் இயங்குகின்ற நிறுத்தத் தொகுதியைப் பயன்படுத்தும்போது அதிகரிக்கின்ற எடை போன்ற தேவைகளைக் கருத்தில் கொண்டு, மின்கல உதவியுடன் இயங்கும் இலத்திரனியல் முச்சக்கர மோட்டார் ஊர்தியின் எடை மற்றும் மின்கலத் தொகுதியின் எடை உள்ளடங்கலாக 650 கிலோகிராமை விஞ்சாத வகையில் பொருள்கோடலை மீண்டும் திருத்தியமைக்குமாறு, உள்நாட்டு இலத்திரனியல் முச்சக்கர மோட்டார் ஊர்தி தயாரிப்பாளர்கள் மற்றும் மாற்றியமைக்கும் தொழிற்றுறையில் ஈடுபடுகின்றவர்கள் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு கோரிக்கை சமர்ப்பித்துள்ளனர். அதற்கிணங்க, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனையைக் கருத்தில்கொண்டு, முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை உள்ளடக்கி மோட்டார் வாகன சட்டத்தை திருத்தம் செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. 2023ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான கட்டளைகள்**

ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயத்திலுள்ள ஒருசில ஏற்பாடுகள் மற்றும் பிற சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள சமவாயங்கள், தரநியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளை வலுவாக்கம் செய்தல், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பிரகடனங்களுடன் தொடர்புடைய குற்றங்கள் மற்றும் இலஞ்சம், ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றங்களை உள்ளடக்கியவாறு, மற்றும் விசாரணை செய்வதற்கான சுயாதீன ஆணைக்குழுவை நிறுவுவதற்கான சட்ட ஏற்பாடுகளை வகுப்பதற்காக 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. குறித்த சட்டத்தால் விதிக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பாகவோ அல்லது கட்டளைகளை உருவாக்குவதற்கோ அதிகாரமளிக்கப்படும் விடயங்கள் தொடர்பாக அமைச்சர் ஆணைக்குழுவின் கருத்துகளைக் கேட்டறிந்து கட்டளைகளைத் தயாரித்தல் வேண்டும். இலஞ்சம், ஊழல் பற்றிய சாத்துதல்களுக்கான விசாரணை ஆணைக்குழுவிடம் கேட்டறிந்து தயாரிக்கப்பட்ட கட்டளைகளை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்காக 2025.03.17 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, 2428/43 ஆம் இலக்க 2025.03.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2025 ஊழல் எதிர்ப்பு (சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பிரகடனம்) கட்டளைகளை பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**08. மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

தற்போது மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகமாக சேவையாற்றிய இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியான நிசாந்த அநுருத்த வீரசிங்க அரச சேவையில் வேறு துறையில் பதவி வகிப்பதற்கு இயலுமை கிட்டும் வகையில் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் பதவியிலிருந்து தன்னை விடுவிக்குமாறு கோரியுள்ளார். அதற்கிணங்க, வேறு பொருத்தமான பதவிக்கு நியமிக்கும் வகையிலும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு இணைப்புச் செய்வதற்கும் அதனால் ஏற்படும் வெற்றிடத்துக்கும் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் பதவிக்கு தற்போது வடமேல் மாகாண சபையின் நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, வீடமைப்பு மற்றும் கட்டுமானத்துறை மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக பணிபுரிகின்ற இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியான கமல் அமரசிங்கவை நியமிப்பதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09.பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவையால் நியமிக்கப் பட்டுள்ள விசேட குழுவை நிறுவுதல்**

நடுத்தரக்கால வேலைச்சட்டகத்தின் மொத்தத் தேசிய உற்பத்தியின் 05 சதவீதத்துக்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு அரசு எதிர்பார்க்கின்றது. நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டை அடைவதற்காக முதலீடுகளுக்கு நேயம்மிக்க கொள்கை வகுப்புகள், உட்கட்ட மைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல்கள்மீது அரசு கவனம் செலுத்தியுள்ளது. ஆயினும், கடந்த சில தசாப்தங்களாக தனியார் முதலீடுகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் மற்றும் அரசின் முதலீடுகள் மொத்தத் தேசிய உற்பத்தியின் 04 - 05 சதவீதமாக மாத்திரம் இருக்கின்றமையால், எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு தனியார் முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கிணங்க, வினைத்திறன் மற்றும் தேசிய பொருளாதார நோக்கங்கள் மீது கவனம் செலுத்துவதை உறுதிப்படுத்தி பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கொள்கைக் கலந்துரையாடல்கள் மேற்பார்வை மற்றும் அவற்றுக்கான வசதிப்படுத்தல்களுக்கு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவை நிறுவுவதற்கு ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நாணய மாற்று விதம் (22.04.2025)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 187.6327 | 197.4514 |
| கனேடியன் டொலர் | 212.2516 | 221.1689 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.5588 | 42.1148 |
| யூரோ | 338.5157 | 351.7076 |
| ஜப்பான் யென் | 2.0926 | 2.1734 |
| சிங்கப்பூர் டொலர் | 224.4837 | 234.4129 |
| ஸ்ரேலிங் பவுன் | 394.0265 | 408.4610 |
| சுவிஸ் பிராங் | 361.8795 | 378.5912 |
| ஐ.அ. டொலர் | 295.1061 | 303.7968 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 793.8789 |
| குவைட் | குவைட் தினார் | 977.4378 |
| ஓமான் | ஓமான் றியால் | 777.2684 |
| கட்டார் | கட்டார் றியால் | 82.0153 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 79.7571 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 81.4704 |

## பெயர் மாற்றம்

கற்பிட்டி மணல்தோட்டம் எனும் முகவரியில் வசித்து வரும் இராஜேந்திரன் நாகேந்திரன் ஆகிய நான் கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை அப்துல்லா முகம்மது றஹீம் என மாற்றியுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**அப்துல்லா முகம்மது றஹீம்**

# திசைகாட்டியினர் தமது கிராமத்து பொய்யர்களுக்கு அதிகாரத்தைப் பெற்றுத்தருமாறு கோரி வருகின்றனர்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச





ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் வெற்று வாக்குறுதிகளை வழங்கும் அரசியலால் இன்று வளமான நாட்டையும் அழகான வாழ்க்கையையும் உருவாக்கும் நடவடிக்கை சீரழிந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களில் பொய் மற்றும் ஏமாற்று வேலைகளைச் செய்து மக்களை ஏமாற்றியதுமட்டுமல்லாமல், தற்போது உள்ளூராட்சித் தேர்தலிலும் அதனையே முன்னெடுத்து கிராமத்தில் தமது பொய்யர்களுக்கு அதிகாரத்தைப் பெற்றுத்தருமாறு கோரி வருகின்றனர். எனவே, மூன்றாவது தடவையாகவும் இவர்களிடம் ஏமாறப் போகிறீர்களா என எதிர்க்கட்சித் தலைவர் மக்களிடம் கேள்வியெழுப்பினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிமித்தம் பெலியத்த தேர்தல் தொகுதியில் நடைபெற்ற பிரதேசமட்டக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''வரி, ஊழல், மோசடி, திருட்டு, இலஞ்சம் போன்றவையே எரிபொருள் உள்ளிட்ட எண்ணெய் விலை அதிகரிப்புக்கு காரணம் என்றனர். இவற்றை நீக்கி எண்ணெய் விலையைக் குறைக்கலாம் என்று மேடைக்கு மேடை முழங்கினர். தெளிவான அதிகாரம் கிடைத்தும் இன்னும் இவற்றின் விற்பனை விலை அதிகமாகவே காணப்படுகின்றது.

துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும் விலைக்கு எண்ணெய் வழங்கப்படுமென்றும் தெரிவித்தனர். விலைச்சூத்திரத்தை இல்லாதொழிப்போம் என்றனர். அதுவும் நடக்கவில்லை. எரிபொருளுக்கான வரியை நீக்கி, கொமிஷனை நீக்கினால், துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும் அதே விலைக்கு எரிபொருளைப் பெற்றுத்தருவோம் என்றனர். ஆனால் அவர்கள் கூறியது பொய்.

2,63,000 சிறிய மற்றும் நடுத்தர தொழில்கள் மூடப்பட்டுள்ளன. தமது முதலாவது வரவு - செலவுத் திட்டத்திலே 35,000 வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தபோதிலும் ஒருவருக்குக் கூட வேலை வழங்கப்படவில்லை. வறுமையை ஒழிக்க புதிய திட்டமொன்றை முன்வைப்பதாகவும் உறுதியளித்தனர். ஆனால், அதுவும் நடக்கவில்லை. பொய், மோசடி மூலம் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர். குடும்ப வருமானம் பரவலாகக் குறைந்து காணப்படுகின்றது. பலர் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர். 2,63,000 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்கள் மூடப்பட்டுவிட்டன. ஆனால், யாரும் அவர்களுக்கு உதவவில்லை'' – என்றார்.

# உலகின் மிகப்பெரிய மற்றும் பழைமையான சர்வதேச கண்காட்சியில் இணையும் இலங்கை





பல நாடுகளின் பங்கேற்புடன் நடைபெற்று வருகின்ற உலகின் மிகப்பெரிய மற்றும் பழைமையான சர்வதேச கண்காட்சியான Word Expo கண்காட்சியில், இலங்கையின் சுற்றுலா, கலாசாரம், சுதேச மருத்துவம், தேயிலை மற்றும் ஆடை உள்ளிட்ட துறைகளில் இலங்கையின் அடையாளத்தை வெளிப்படுத்த ஒரு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

புதிய முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலங்களைக் கொண்ட ஒரு பிராந்தியமாக இலங்கையை முன்னிலைப்படுத்த பல முன்னணி அரச மற்றும் தனியார் பங்குதாரர்கள் இங்கு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

Word Expo கண்காட்சியின் நோக்கம், உலகின் பிற நாடுகளுடன் அனைத்துத் துறைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்த அறிவைப் பரிமாறிக் கொள்வதும் ஒரு நாட்டின் பொருளாதார, கலாசார மற்றும் அறிவியல் சாதனைகளைக் காண்பிப்பதன் மூலம் அதன் பிம்பத்தை மேம்படுத்துவதுமாகும்.

ஏப்ரல் 13 முதல் ஒக்டோபர் 13 வரை ஜப்பானின் ஒசாகாவில் நடைபெறும் Word Expo கண்காட்சி 2025, நமது வாழ்வுக்கான எதிர்கால சமூகத்தை வடிவமைத்தல் என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறும். மேலும் ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கை இந்தக் கண்காட்சியில் பங்கேற்கிறது.

ஒசாகாவில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் 28 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# திருச்சபை மக்களைக் கடந்து மனுக்குலத்தின் மாட்சிமைக்காக மறையுரை ஆற்றியவர்

## பாப்பரசரின் மறைவுக்கு சிறீதரன் எம்.பி. இரங்கல்

**(பு.கஜிந்தன் )**

பரிசுத்த பாப்பரசரின் மறைவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அனுப்பிவைத்துள்ள இரங்கல் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கத்தோலிக்கத் திருச்சபையின் பரிசுத்த பாப்பரசரின் மறைவு, உலகவாழ் மக்கள் ஒவ்வொருவரையும் ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கியிருக்கிறது.

கத்தோலிக்க மக்களின் திருத்தந்தை என்ற அடையாளத்தினூடே தனது திருச்சபை மக்களைக் கடந்து மனுக்குலத்தின் மாட்சிமைக் கான அவரது எண்ணங்களின் மகத்துவத்தை, கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் அவர் ஆற்றிய மறையுரையின் சாரத்தில் நாம் அறிந்துகொள்ள முடியும்.

கருணையையும் மனிதநேயத்தையும் சமாதானத்தையும் விரும்பிய இந்த யுகத்தின் பேரடையாளமாக மறைந்த திருத்தந்தையின் காலமும் பணிகளும் இருந்திருக்கின்றன.

2013ஆம் ஆண்டு ஏறத்தாழ இரண்டு இலட்சம் மக்களின் பங்கேற்போடு நடைபெற்ற மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அடிகளாரின் தலைமைப் பணியேற்புத் திருப்பலியில் உலகத்தில் பொருளாதாரத்துறை, அரசியல் துறை, சமூகத் துறை ஆகியவற்றில் பொறுப்பான பதவியில் இருப்போர் அனைவரும் கடவுளின் படைப்புலகு குறித்து அக்கறை கொண்டிருக்கவேண்டும். உலகத் தலைவர்கள் சுற்றுச்சூழலையும் குழந்தைகளையும் முதியோரையும் துன்பத்தில் உழல்வோரையும் பாதுகாக்கக் கடமை கொண்டுள்ளார்கள் என்றுரைத்த அவரது வார்த்தைகள் உலகை வழிநடத்தும் பரிவும் பக்குவமும் அவருக்கிருப்பதை அடையாளப் படுத்திற்று.

மதங்களைக் கடந்த மனிதநேயத்தின் அடையாளமாக சமாதானத்தின் தூதுவனாக இறைபணி ஆற்றிய கத்தோலிக்க திருச்சபையின் திருந்தந்தை பிரான்சிஸ் அடிகளாரின் மறைவின் துயர்சுமந்த எமது மக்களோடு நானும் இணைந்திருக்கிறேன் - என்றுள்ளது.

# கொழும்பு நகரைச் சுற்றி சிசிரிவி கெமராக்களூடாக 4,000 சாரதிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு நகரைச் சுற்றியுள்ள சிசிரிவி கெமராக்கள் மூலம் பதிவான காட்சிகளின் அடிப்படையில் வாகன விதிமீறல்களில் ஈடுபட்ட 4,000க்கும் மேற்பட்ட வாகனச் சாரதிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வாகனச் சாரதிகளின் வீடுகளுக்கு அவர்கள் குறித்த வாகன விதிமீறல்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டு, சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் கொழும்பு நகரைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள CCTV கெமராக்கள் மூலம் வாகன விதிமீறல்களைக் கண்டறியும் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி, இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வீதி விதிமுறைகளை மீறிய 4,048 வாகனச் சாரதிகளுக்கெதிராக அபராதம் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல உத்தேசித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் உரிய முறையில் உரிமை மாற்றப்படாத 241 வாகனங்களுக்கெதிராகவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனம் விற்பனை செய்யப்படும்போது உரிமை மாற்றம் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், இந்த ஆண்டின் கடந்த காலப்பகுதியில் 724 வாகன விபத்துகள் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்துகளால் 764 பேர் உயிரிழந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில், 1,535 பாரிய விபத்துகளும் 2,699 சிறிய விபத்துகளும் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# 6ஆவது தடவையாகக் கூடிய உணவுப் பாதுகாப்புக் குழு



நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக உணவுப் பாதுகாப்புக் குழு 06ஆவது தடவையாகவும் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ. லால் காந்த, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, ஆகியோரின் இணைத்தலைமையில் நேற்று முன்தினம் (21) ஜனாதிபதி செயலகத்தில் கூடியது. இக் கூட்டத்தில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார மற்றும் அமைச்சுகளின் செயலாளர்களைக் கொண்ட உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் ஏனைய உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# பஹலஹல்மில்லவெவ பகுதியில் குடும்பஸ்தரொருவர் சடலமாக மீட்பு

**(அநுராதபுரம் நிருபர் )**

நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக சந்தேகிக் கப்படும் குடும்பஸ்தரொருவரின் சடலம் பஹலஹல்மில்லவெவ பகுதியிலுள்ள குளமொன்றிலிருந்து அநுராதபுரம், எலயாபத்துவ பொலிஸார் மீட்டுள்ளனர்.

எலயாபத்துவ பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து நேற்று முன்தினம் (21) சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் பிரதேசவாசிகளின் உதவியோடு சடலத்தை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 42 வயதுடைய கல்கடவள பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என அடையாளம் காணப் பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்காக சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம், எலயாபத்துவ பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊடக அமைச்சின் கீழ் நாடளாவிய ரீதியாக ஊடகவியலாளர்களுக்கான நலத் திட்டங்கள்



ஊடகவியலாளர்களின் தொழில்முறை படிப்புகள், நலன்புரி மற்றும் பிற திறன்களை மேம்படுத்துவதற்காக நாடு தழுவிய ரீதியில் பல திட்டங்களை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனப் பிரதிநிதிகளுடன் சுகாதார மற்றும் ஊடக அமைச்சில் அண்மையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தொழில்முறை பத்திரிகையாளர்களைப் பாதிக்கும் தொழில்முறை பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளைக் கண்டறிவதையும் நாட்டின் ஊடகத்துறை பெருமைமிக்க தொழில்முறை பத்திரிகையாளர்களால் ஆசீர்வதிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதையும் நோக்கமாகக் கொண்டு இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

பத்திரிகையாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை நிறுவுதல், தேசிய ஊடகக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் ஊடகத் துறையில் சுய ஒழுங்குமுறையை நிறுவுதல் ஆகியவை குறித்து இங்கு விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் நிதி அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய துறைகளுடன் கலந்தாலோசித்து இதற்கான முறையான திட்டம் உடனடியாகத் தயாரிக்கப்படுமென்றும் அமைச்சர் விபரித்தார்.



மத்திய கொழும்பு இந்து மகா வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (21) நடைபெற்றது. பழைய மாணவ சங்கமும் அகில இலங்கை கிராமிய கலை ஒன்றியமும் இணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தன. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (படங்கள் – எம்.நசார்)

# தமிழ்ச் சங்கம் நடத்தும் உலக புத்தக தினம் - 2025 சிறப்பு நிகழ்வு

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கல்விக்குழுச் செயலாளர் த.இராஜரட்னம் தலைமையில் இன்று (23) புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு விநோதன் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் உலக புத்தக தினம் சிறப்பு நிகழ்ச்சியில் ‘வாசிப்பு உங்கள் வழி’ எனும் தொனிப்பொருளில் அபிலாஷ் விஜயகுமாரன் மற்றும் ரக்ஷனா ஷரிபுத்தீன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

# அக்கரைப்பற்றில் இலவச மருத்துவ முகாம்




(மீராநகர் செய்தியாளர்)

அக்கரைப்பற்று இளமாணிப் பட்டப்பயிலுனர் சங்கம், அம்பாறை மாவட்ட அரச மருத்துவ மாணவர்கள் சங்கம் மற்றும் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் என்பன இணைந்து நடத்திய மருத்துவ முகாம் சனிக்கிழமை (19) அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், கிழக்கு மாகாண தேசிய சுதேச மருத்துவ திணைக்களம், போஷாக்கு நிபுணர்கள், விலங்குற்பத்தி சுகாதாரத் திணைக்களம் உட்பட சுகாதாரத் துறை அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர்.

இந்த முகாமில் அக்கரைப்பற்று பிராந்தியத்தைச் சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட ஆண், பெண்கள் கலந்துகொண்டு இரத்த அழுத்தம், சர்க்கரைநோய் பரிசோதனை, உடல் திணிவுச்சுட்டி, மார்பகப் புற்றுநோய் அல்லது மார்பகக் கட்டியைக் கண்டறியும் பரிசோதனை,மார்பகப் புற்றுநோய், கர்ப்பப்பைசார் புற்றுநோய்கள், தொற்றா நோய்கள், நுண்ணுயிர்கொல்லி எதிர்ப்புகள், நீரிழிவால் காலில் ஏற்படும் புண்ணை பராமரித்தல் போன்ற பல்வேறு தலைப்புகளில் தெளிவூட்டல்களும் வழங்கப்பட்டன.

# மனநிலை பிரச்சினைகளைத் தீர்க்கும் பயிற்சி நிலையம் அமைக்கும் முன்மொழிவு குறித்து கலந்துரையாடல்



(வீரமுனை செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் மற்றும் துறைத்தலைவர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று (22) மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா.முரளீஸ்வரன் தலைமையில் பணிமனையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு, மாந்தீவு பிரதேசத்தில் அமைந்துள்ள தொழுநோய் வைத்தியசாலை நடவடிக்கைகள் நிறைவுற்றுள்ள நிலையில் அப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்தொகுதி மற்றும் வளாகத்தை தற்போதைய நிலையில் பாடசாலை மாணவர்களுக்கு அதிகரித்துவரும் மனநிலை ரீதியான பிரச்சினைகளைக் குறைக்கும் முகமாக இயற்கையுடன் கூடிய பயிற்சி நிலையமொன்றை அமைக்கும் விதமான செயற்றிட்ட முன்மொழிவு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவை பணிமனையால் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த திட்ட முன்மொழிவு மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் உட்பட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து எதிர்வரும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்படும்.

பணிமனையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இதனை வெளிப்படுத்தியிருந்தார்.

இதன்போது பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் செயற்பாடுகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன், தற்போது மக்களுக்கு முன்னெடுக்கப்பட்டுவரும் சேவைகள் அதனை பொதுமக்கள் பயன்படுத்தவேண்டிய அவசியங்கள் குறித்தும் கருத்துரைகள் வழங்கப்பட்டன. அத்துடன், மாவட்டத்தின் சுகாதார செயற்பாடுகள் மற்றும் பொதுச் சுகாதார செயற்பாடுகள் குறித்து கருத்துகள் முன்வைக்கப்பட்டதுடன் அவற்றை மக்கள் மயப்படுத்துவதற்காக ஊடகவியலாளர்கள் முன்னெடுக்கவேண்டிய செயற்பாடுகள் குறித்தும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

இக் கூட்டத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்தின் இணைப்பாளர் டாக்டர் அச்சுதன், திணைக்களத்தின் துறைப்பொறுப்பாளர் மற்றும் வைத்தியர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது சுகாதாரத் துறையுடன் இணைந்து பணியாற்றும் ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் வகையில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# விண்வெளி விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் அல்-ஹிக்மா வித்தியாலய மாணவர்கள் சாதனை




(சீனக்குடா செய்தியாளர்)

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட 2025 ஆண்டுக்கான வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில், கிண்ணியா அல்-ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் சாதனை படைத்துள்ளார்.

தரம்-08ஐச் சேர்ந்த மாணவன் எம்.ஆர்.எம்.றிப்அத், மாகாண மட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

மேலும், வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளில் வெற்றிபெற்ற எம்.எவ்.லீன் ஸஹ்தா (தரம்- 09), எம்.ஆர்.எம்.ரிபாத் (தரம் - 08), டபிள்யூ.எம்.தவா (தரம் - 07), ஏ.எம்.அபீப் (தரம் - 07) ஆகிய மாணவர்களும் வலய மட்டத்தில் கலந்துகொண்டு வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியைப் பெற, இம்மாணவர்களை தயார்படுத்திய அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துகளையும் பாடசாலை அதிபர் என்.எம்.அஹமட் நஷ்ரப் தெரிவித்துள்ளார்.




கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் நித்திய இளைப்பாற்றையடுத்து மட்டக்களப்பிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள், மட்டக்களப்பு ஆயர் இல்லம் மற்றும் புனித ஜோசப் வாஸ் சபை ஆகியவற்றில் புளியந்தீவு புனித மரியாள் பேராலய பங்குத்தந்தை, பங்கு மக்களால் அனுதாபப் பதாகைகளும் வெள்ளைக்கொடிகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மரியாள் தேவாலய கொடிகளும் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளன. (மட்டக்களப்பு செய்தியாளர்)

# தேர்தல் கடமை மேற்பார்வையாளர்களுக்கு மட்டக்களப்பில் பயிற்சி செயலமர்வு



(மட்டக்களப்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ள தபால் வாக்கு அடையாள மிடும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் அலுவலர்களுக்கான செயலமர்வு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் இடம்பெற்ற மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி செயலமர்வானது மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியானின் ஒழுங்குபடுத்தலில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் திங்கட்கிழமை (21) இடம்பெற்றது.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் கடமைகளில் ஈடுபடும்போது மேற்கொள்ளவேண்டிய முன்னாயத்த விடயங்கள் தொடர்பாகவும் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக தெளிவூட்டப்பட்டன.

முதற்கட்டமாக 24, 25ஆம் திகதிகளில் தபால்மூல வாக்களிப்புகளும் இறுதிக்கட்ட தபால்மூல வாக்களிப்பு தினங்களாக 28, 29ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் மூதூரில் முற்றுகை

(மூதூர் செய்தியாளர்)

மூதூர் ,தங்கபுரம் காட்டுப் பகுதியில் இயங்கிய சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையத்தை மூதூர் பொலிஸார் நேற்று முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு காய்ச்ச பயன்படுத்தப்படும் மூன்று பரல்களிலிருந்து தலா 180 லீற்றர் கசிப்பு காய்ச்ச பயன்படுத்தப்படும் கோடாவை கைப்பற்றியுள்ளனர்.

அதேவேளை, 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கட்டுப்பாட்டு எல்லைக்குள்ளிருந்த புதுநகர்ப் பாதை மக்கள் பாவனைக்குக் கையளிக்க ஏற்பாடு

(வீரமுனை செய்தியாளர்)

மட்டக்களப்பில் புதுநகர்ப் பகுதியில் விமானப்படையினரின் கட்டுப்பாட்டு எல்லைக்குள்ளிருந்த பாதையை மக்களின் பாவனைக்குக் கையளிக்கும் வகையில் அதனை திறப்பதற்கான முன்னாயத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளாக விமானப்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த இந்த வீதியை திறப்பதற்கு அப்பகுதி மக்களால் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது அந்தப் பாதையை மக்கள் பாவனைக்கு மீண்டும் வழங்கும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக, நேற்றைய தினம் விமானப்படையினரின் ஒத்துழைப்புடன் அடைக்கப்பட்டுள்ள வேலிகளை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் பணிகளை மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் என்.தனஞ்ஜெயன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெட்னம், விமானப்படையின் கட்டளை அதிகாரி ஆகியோர் பார்வையிட்டனர்.

இந்த வீதி திறக்கப்படுமானால் மட்டக்களப்பு நகரிலிருந்து வலையிறவு பாலம் ஊடாக வவுணதீவு பிரதேசத்துக்கு செல்வோர் குறைந்த தூரத்தில் செல்லமுடியுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.



*கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கோமரங் கடவல பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ரொஷான் அக்மீமன ஆகியோர் திங்கட்கிழமை (21) திருகோணமலை மாவட்ட கோமரங்கடவல பிராந்திய மருத்துவமனை மற்றும் பிரதேச சபைக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டனர். இதன்போது கோமரங்கடவல பிராந்திய மருத்துவமனையிலுள்ள பிரச்சினைகள் ஆராயப்பட்டு அந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க குறித்த பிரதேசத்திலுள்ள அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. (கிண்ணியா செய்தியாளர்)*



*முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் டீ- 100 திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஓர் அங்கமாக மருதமுனை பிரதேச உள்ளக வீதிகள் மழை காலங்களில் மக்கள் பாவனைக்குப் பொருத்தமற்றதாக உள்ளதை நிவர்த்திக்கும் வகையில் மருதமுனை அக்பர் வீதியின் குறுக்கு வீதியான கலாபூஷணம் பீ.எம்.எம்.ஏ.காதர் வீதி, மக்பூலியா வீதி ஆகியன சுமார் 80 இலட்சம் ரூபா செலவில் கொங்கிறீட் வீதிகளாக புனரமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மாளிகைக்காடு செய்தியாளர்)*

# மண்முனை தென் எருவில்பற்று செயலகத்தில் இரத்ததான நிகழ்வு

(மட்டக்களப்பு)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் இரத்ததான நிகழ்வானது தொடர்ச்சியாக இவ்வருடமும் 8ஆவது தடவையாக முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியுடன் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வானது திங்கட்கிழமை (21) மு.ப. 8.30 மணி தொடக்கம் பிரதேச செயலாளர் உ.உதயஸ்ரீதர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் கழகங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், பாதுகாப்புப் படையினர், பொதுமக்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என நூற்றுக்கும் அதிகமானோர் இவ்வுன்னதமான நிகழ்வில் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சஹ்ரானின் மத பயங்கரவாதத்தின் மறு தோற்றம் சூப்பர் முஸ்லிம் பயங்கரவாத அமைப்பாக உருவாக்கம்

## கிழக்கை பாகிஸ்தான் போல உருவாக்க ஹிஸ்புல்லாஹ் எம்.பி. முயற்சிக்கிறாரா?

### அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் அமைப்பின் தலைவர் சிவதர்சன் கேள்வி



**(கனகராசா சரவணன்)**

''இலங்கையில் சஹ்ரானின் மதப் பயங்கரவாதம் இப்போது சூப்பர் முஸ்லிம் பயங்கரவாத அமைப்பாக உருவாகியுள்ளதுடன் கிழக்கில் மதரீதியான குட்டிப் பாகிஸ்தான் போல உருவாக்க பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் முயற்சிக்கின்றாரா? இந்த மாகாணம் மூவின மக்களும் வாழுகின்ற சமத்துவமான ஒரு மாகாணம். ஆகவே, மத ரீதியாக ஒரு மாகாணத்தைப் பிரிக்க ஒருபோதும் விடமாட்டோம்'' - என அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் அமைப்பின் தலைவர் சிவதர்சன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 6ஆம் ஆண்டு நினைவேந்தல் அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸின் ஏற்பாட்டில் குண்டு வெடித்த இடத்தில் உயிர் நீத்தவர்களுக்கு ஆத்மசாந்தி வேண்டி மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்திய நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பாரிய தீவிரவாதத் தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்துள்ளதுடன் 80க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இது ஒரு வேதனையான விடயமென்பதுடன் உலகளாவிய ரீதியில் ஒரு துன்பகரமான செயலுமாகும்.

உண்மையில் ஒரு வேதனையான நாட்களைக் கடந்து செல்கின்றோம். இந்தப் பயங்கரவாதத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகளாக செயற்பட்டவர்கள் இந்த இடத்தில் வர்ணிக்கப்பட்டு இரத்த ஆறுகளாக ஓடுகின்றபோது அதைப் பார்த்து ரசிக்கக்கூடிய ஒரு தீவிரவாத செயலாகக் கருதுகின்றோம். இதனைச் சொல்வதற்கு வார்த்தைகளே இல்லை. கண்ணீரோடு இதனை ஒவ்வொரு நிமிடங்களும் கடந்து செல்கின்றோம். வருடத்தில் ஒருமுறை இந்த நினைவேந்தலை செய்தாலும் ஒவ்வொரு நாளும் பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் வேதனையுடன் கண்ணீருடன் நாட்களைக் கடந்து செல்கின்றனர்.

சொந்தப் பிள்ளை கண்முன்னே மரணித்த கொடூரமான செயற்பாட்டைக் காணக்கூடியதாக இருந்தது. எனவே, இவ்வாறான ஒரு மத தீவிரவாதம் திட்டமிட்டு செய்ததை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த உயிர்த்த ஞாயிறு படுகொலை தொடர்பான சூத்திரதாரிகள் யார் என ஜனாதிபதி 21ஆம் திகதிக்கு முன்னர் அறிவிப்பதாகத் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாகக் கூறிய வார்த்தைகளை நம்புகின்றோம். ஆனால், இதுவரை வெளியிடப்படவில்லை. இந்த உயிர்த்த ஞாயிறு தற்கொலையின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் என்பவன் மரணத்துக்கு முன்னர் கூறிய விடயம், 'அல்லாவை ஏற்றுக்கொள்ளாதவர்கள் காபீர்கள். அவர்கள் கொல்லப்பட வேண்டும். நாங்கள் மரணித்தாலும் இதைப் பார்க்கின்ற ஒவ்வொரு முஸ்லிம்களும் காபீர்களை கொலை செய்ய வேண்டும்''- என்ற இந்த விடயம் தவறானது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதேவேளை, அந்த சஹ்ரானின் கடும் போக்குவாத சிந்தனையுடன் தற்போது சூப்பர் முஸ்லிம் பயங்கரவாத அமைப்பு உருவாகியுள்ளது. எனவே, இந்த ஐ.எஸ்.ஐ.எஸ். குண்டு வெடிப்புக்குப் பின்னர் நாங்கள் தொடர்ந்து ஓர் அச்சமான சூழலில் இருக்கின்றோம். மீண்டும் நாங்கள் மரணிப்பதற்குத் தயாரில்லை. எனவே, இந்த மத பயங்கரவாதத்துக்கெதிராக அரசாங்க பாதுகாப்புப் படை செயற்பட வேண்டும். எங்கேயோ ஒரு நாட்டில் யாரோ ஒருவர் இஸ்லாமிய சமூகத்தைச் சுட்டுக் கொன்றார் என்பற்காக இலங்கையில் அப்பாவி குழந்தைகளையும் மக்களையும் கொலை செய்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் இது முஸ்லிம்களின் தாயகம் என்கின்றார். கிழக்கில் மத ரீதியான ஒரு தாயகத்தை உண்டாக்க முயற்சிக்கின்றாரா? குட்டி பாகிஸ்தான் போல உருவாக்க நினைக்கின்றாரா? அதனை கடைசி வரைக்கும் விடமாட்டோம். இந்த மாகாணம் மூவின மக்களும் வாழுகின்ற சமத்துவமான ஒரு மாகாணம். எனவே, மத ரீதியாக மாகாணத்தைப் பிரிக்க முயற்சிப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே, பாதிக்கப்பட்ட சமூகம் என்ற ரீதியில் மனவேதனையுடன் சொல்லுகின்றோம். நாங்கள் திட்டமிட்டுக் கொல்லப்பட்டுள்ளோம். இது மன்னிக்க முடியாத விடயம். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் கொடு என இயேசுநாதர் சொல்லியுள்ளார். ஆனால், அறைய வந்தால் கன்னத்தைக் கொடுத்திருப்போம். அவர்கள் குண்டுடன் கொல்ல வந்தார்கள் எனத் தெரியாது. எனவே, மீண்டும் எமது சந்ததியை அழிக்கத் தயாரில்லை. ஆகவே, ஜனாதிபதித் தேர்தலின்போது கூறியதை நிறைவேற்ற வேண்டும். உண்மையான சூத்திரதாரி யாரெனக் கண்டுபிடித்து கைதுசெய்து தீர்வு பெற்றுத்தர வேண்டும். இதனை வைத்து எவரும் அரசியல் செய்ய வேண்டாம்'' - என்றார்.

# சங்குல குளத்திலுள்ள நீர் வெளியேறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம்

## கடும் வெயிலுக்கு மத்தியிலும் தமது வாழ்வாதாரம் அழிக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டு





**(வீரமுனை செய்தியாளர்)**

மட்டக்களப்பு – ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலர்சேனை பகுதியிலுள்ள சங்குலகுளம் ஒருசில தனி நபர்களால் உடைக்கப்படுவதால் குளத்திலுள்ள நீர் தொடர்ச்சியாக வெளியேறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்கள் நேற்றுமுன்தினம்(21) செங்கலடி பிரதேச செயலகம் முன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காலை சுமார் 10.30 மணியளவில் செங்கலடி சந்தி பிரதான வீதி - சந்தியில் ஒன்றிணைந்த இலுப்படிச்சேனை கிராம மக்கள் பேரணியாக செங்கலடி பிரதேச செயலகம்வரை சென்று செங்கலடி பிரதேச செயலகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், செயலக வளாகத்துக்குள் நுழைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

''குளத்தை உடைப்பதை நிறுத்து, அரச அதிகாரிகளே எமது பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள், அரசே எமக்கு உதவு'' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமார் ஒரு மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடும் வெயிலுக்கு மத்தியிலும் தமது வாழ்வாதாரம் அழிக்கப்படுவதாகத் தெரிவித்து தமது கைக்குழந்தைகளுடனும் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதே வேளை, ஆர்ப்பாட்ட இடத்துக்கு இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன், இ.ஸ்ரீநாத் ஆகியோர் வருகை தந்திருந்ததுடன் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு அமைப்பாளர் என்.திலகநாதன் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இதனையடுத்து குறித்த மக்களின் பிரச்சினை தொடர்பாக பிரதேச செயலாளருடனும் மக்கள் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

பிரதேச செயலாளர் தமக்கு நேரடியாக இதற்கான பதில் தரவேண்டுமென்ற கோரிக்கைக்கமைய செங்கலடி பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரம் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கலந்துரையாடி சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இதற்கான தீர்வைப்பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்ததையடுத்து, ஆர்ப்பாட்டக் காரர்கள் பிரதேச செயலாளரிடம் தமது மகஜரையும் கையளித்து கலைந்து சென்றனர்.

# நிராகரிக்கப்பட்ட பல திட்டங்களை நகர அபிவிருத்தி என்ற போர்வையில் முன்னெடுப்பது பொருத்தமற்றது

## குகதாசன் எம்.பி.

**(கிண்ணியா செய்தியாளர்)**

''கடந்த காலங்களில் நிராகரிக்கப்பட்ட திட்டங்களை நகர அபிவிருத்தி என்ற போர்வை யில் அதே இடத்தில் திருகோணமலை நகர் பகுதியில் முன்னெடுப்பது பொருத்தமற்றது'' - என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் (21) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

''திருகோணமலை நகர அபிவிருத்தித் திட்டம்



தொடர்பில் பல விடயங்களை மேற்கொள்ளவுள்ள நிலையில் இவ்வாறான திட்டமிடப்படாத அபிவிருத்தி கோணேசர் கோவில் பகுதி உட்பட கரையோரப் பகுதிகளுக்கும் பாதக விளைவுகளை ஏற்படுத்தும். குறித்த இந்தப் பத்தாண்டுத் திட்டத்தில் மூன்று விடயங்கள் பாதகமானவை. கோட்டாபய காலத்தில் குறித்த பகுதியில் திட்டமொன்றை முன்வைத்தார். அது நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிராகரிக்கப்பட்டது. ஏனெனில், அந்தப் பகுதி தொல்பொருள் பகுதி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பகுதி என்பதால் வீடமைப்புத் திட்டம் சாத்தியமாகாதென்றும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் தெரிவித்தார்.

# அநுர அரசு ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத் தவறியுள்ளது

## தளவாய் வட்டார தமிழரசுக் கட்சி வேட்பாளர் நிலாந்தன்





**(கல்லடி செய்தியாளர்)**

''ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடைபெற்று ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் கடைசியாக ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத் தவறியுள்ளது'' - என ஊடகவியலாளரும் செங்கலடி தளவாய் வட்டார தமிழரசுக் கட்சியின் வேட்பாளருமான செ.நிலாந்தன் தெரிவித்தார்.

செங்கலடி - புலையவெளி பகுதியில் திங்கட்கிழமை (21) நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,


''உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் நடைபெற்று ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இலங்கையில் நடைபெற்ற மிக மோசமான இந்தப் பயங்கரவாதத் தாக்குதலால் சுமார் 260க்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் பலியானார்கள். இன்றுவரை அவர்கள் எதற்காகக் கொல்லப்பட்டார்கள், ஏன் பலியானார்கள் என்பது குறித்து யாருக்கும் தெரியவில்லை.

இன்று ஆறு வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசினால் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த முடியவில்லை. கடைசியாக ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலை நடத்தியவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்துவோம் எனக் கூறி மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்தனர்.

அவர்களிடம் ஜனாதிபதி பதவியைக் கொடுத்துள்ளோம். பாராளுமன்றப் பெரும்பான்மையைக் கொடுத்துள்ளோம். அதனை வைத்துக்கொண்டு எதனையும் செய்ய முடியவில்லை. தற்போது அவர்கள் உள்ளூராட்சி சபையின் அதிகாரங்களை தங்களுக்குத் தருமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர். ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தை வைத்து செய்ய முடியாதவர்கள் உள்ளூராட்சி மன்றங்களை வைத்து என்ன செய்யப்போகின்றனர்?

அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகி ஒரு வருடமாகிய நிலையில், அவர் இந்த ஆறாவது ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து உலகுக்கு காட்டுவார் என எதிர்பார்த்தோம். ஆனால், ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இதுவரை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் உண்மையான குற்றவாளிகளைக் கைதுசெய்ய முடியவில்லை. எய்தவர்கள் இருக்கும்போது அம்புகளைக் கைப்பற்றும் நிலையே காணப்படுகிறது. பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தொடர்ச்சியாக உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை நடத்திய சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து தண்டனை வழங்குமாறு தேசிய மக்கள் சக்தி அரசுக்கு அழுத்தம் கொடுத்துவரும் நிலையில் இலங்கை கிறிஸ்தவ மக்களை தொடர்ச்சியாக இந்த அரசும் ஏமாற்றி வருகிறது. தாங்கள் ஏன் கொல்லப்பட்டோம், எதற்காகக் கொல்லப்பட்டோம் என்று தெரியாமலே சில குழுக்களின் சில தேவைகளுக்காக பலி கொடுக்கப்பட்ட உயிர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமாக இருந்தால் ஏழாவது உயிர்த்த ஞாயிறு நினைவு தினத்திலாவது இந்த மக்கள் ஏன் கொல்லப்பட்டார்கள், யாரால் கொல்லப்பட்டார்கள், யாருக்காகக் கொல்லப்பட்டார்கள் என்ற உண்மையை கண்டுபிடித்து சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும்'' - என்றார்.

# நாவற்குடாவில் தேசிய மக்கள் சக்தி அலுவலகம் திறந்து வைப்பு





**(கல்லடி செய்தியாளர்)**

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட நாவற்குடா வட்டாரத்துக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் திங்கட்கிழமை (21) மாலை நாவற்குடா பிரதான வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில் கட்சி அலுவலகம் மாவட்ட அமைப்பாளரால் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து தேர்தல் பிரசாரங்கள் இடம்பெற்றன.

இப்பிரசாரக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கந்தசாமி பிரபு, பிரதி வெளிவிவகார வேலைவாய்ப்பு அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தி அமைப்பாளர் திலகநாதன், மட்டக்களப்பு மாநகர சபை முதன்மை வேட்பாளர் கலாநிதி கனகராஜா பிரேம்குமார் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணித் தலைவி செல்லப்பெருமாள் வனிதா உட்பட கட்சி முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.







**நிந்தவூர் பிரதேச சபைக்கான மீரா நகர் வட்டார பிரசாரக் கூட்டம் திங்கட்கிழமை(21) மீராநகர் வட்டார வேட்பாளர் முஹம்மத் அலி தலைமையில் அவரது இல்ல வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். மேலும் தேசிய மக்கள் சக்தியின் நிந்தவூர் பிரதேச அமைப்பாளர் சம்சுன் அலி, மீராநகர் வட்டாரப் பட்டியல் வேட்பாளர் சருக், நிந்தவூர் பிரதேச சபை வேட்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (பொலிவேரியன் செய்தியாளர்)**





**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கான முன்னாயத்த கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் (21) திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான டபிள்யூ. ஜி.எம்.ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது பிரதேச செயலாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. இக்கலந்துரையாடலில் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.கே.டி.நிரஞ்சன் மற்றும் பிரதேச செயலாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (கிண்ணியா செய்தியாளர்)**

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk | businessthamilan@gmail.com

## பண்டாரநாயக்க கல்லூரி பழைய மாணவர் சங்கத்துடன் மக்கள் வங்கி இணைந்து அதன் நாமம் பொறிக்கப்பட்ட கடனட்டை அறிமுகம்




கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து அதன் நாமம் பொறிக்கப்பட்ட புதிய கடனட்டையொன்றை மக்கள் வங்கி பெருமையுடன் அறிமுகப்படுத்தியுள்ளது. கொழும்பு - 02 இல் அமைந்துள்ள மக்கள் வங்கியின் தலைமை அலுவலகத்தில் உத்தியோகபூர்வ அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா, பண்டாரநாயக்க கல்லூரியின் அதிபரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமான கசுன் குணரத்ன, பழைய மாணவரான எயார் சீவ் மார்ஷல் (இளைப்பாறிய) உதேனி ராஜபக்ஷ மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட செயலாளரான சச்சித்ர பிரபா உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்துள்ளனர்.

மக்கள் வங்கி அட்டை மையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் கொடுப்பனவுகள், செயற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் தரப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான பிரதிப் பொது முகாமையாளரான திருமதி நில்மினி பிரேமலால், அட்டைச் செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரியான ஜயந்த டயஸ், அட்டை வணிகம் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளரான அருண தந்தநாராயண் மற்றும் அட்டை வணிகம் மற்றும் தீர்வுகள் முகாமையாளரான திருமதி சாலனி சேனநாயக்க ஆகியோர் இதில் பங்குபற்றினர்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளரான துலிப் சோமிரத்ன, பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினரும் மைக்ரோசொப்ட் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான முகாமையாளருமான ஹர்ஷ ரந்தெனிய , Airport & Aviation Services Sri Lanka (Pvt) Ltd இன் விமான நிலைய முகாமைத்துவத்துக்கான தலைமை அதிகாரி அருண ராஜபக்ஷ உள்ளிட்ட ஏனைய பல அதிகாரிகள் பலரும் பழைய மாணவர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## Eco Go Beyond Awardsஇல் மாணவர்களின் நிலைத்தன்மை முயற்சிகளைப் பாராட்டிய MAS



உலகளாவிய ஆடை தொழில்நுட்பப் பன்முக நிறுவனமான MAS Holdings, நிலைத்தன்மைக் கல்வி மற்றும் இளைஞர் மேம்பாட்டுக்கான தன்னுடைய உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியது. இந்த நிகழ்வு ஏப்ரல் 04, 2025 அன்று துல்ஹிரியவில் உள்ள MAS Athenaவில் நடைபெற்ற MAS Eco Go Beyond நிலைத்தன்மைக் கல்வி நிகழ்ச்சி 2024 விருது வழங்கும் நிகழ்வில் இடம்பெற்றது.

இளைஞர்களின் சிறந்த நிலைத்தன்மை சாதனைகளைக் கொண்டாடிய இந்த நிகழ்வில், சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தின் (IWMI) தலைவி பிரியானி அமரசிங்க மற்றும் GEF Small Grants Programme இன் தேசிய வழிகாட்டுக் குழுத் தலைவர் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகப் பங்கேற்றனர். கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் MAS நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஓராண்டு நீண்ட பயணத்தின் உச்சக்கட்டமாக இந்த விருது வழங்கும் நிகழ்வு அமைந்தது. இந்தப் பயணத்தில் பட்டறைகள், பயிற்சித் திட்டங்கள் மற்றும் மாணவர்களின் தலைமையிலான நிலைத்தன்மை முயற்சிகள் என்பன அடங்கியிருந்தன. இவை உள்ளூர் சமூகங்களில் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொறுப்புணர்வை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டவை.

MAS Holdings நிறுவனம் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பித்த Eco Go Beyond (EGB) திட்டம் இந்த ஆண்டு 18ஆவது ஆண்டு நிறைவைக் கண்டுள்ளது. இத்திட்டம் நிலையான வளர்ச்சி குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதுடன், மாணவர்களின் தலைமையிலான காலநிலைச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

## Uber (Women Rider Preference) அறிமுகம்



இலங்கையின் முன்னணி செயலி அடிப்படையிலான போக்குவரத்து அம்சமான Uber, பெண் பயணிகள் விருப்பத்தெரிவை (Women Rider Preference) அறிமுகப்படுத்தியுள்ளது. பாதுகாப்பை மேம்படுத்துவதற்காகவும் இந்தத் தளத்தைப் பயன்படுத்தி அதிகமான பெண் சாரதிகள் பணியாற்றுவதை ஊக்குவிக்கும் வகையிலும் இந்த வசதி வடிவமைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பம் மூலம் செயற்படுத்தப்படும் இந்த வசதியானது, பெண் பயணிகளிடமிருந்து வரும் பயணக் கோரிக்கைகளை மட்டுமே பெண் சாரதிகள் ஏற்கும் விருப்பத் தெரிவை வழங்குகின்றது. குறிப்பாக, இரவு நேரங்களில் அல்லது அறிமுகமற்ற பகுதிகளில் வாகனம் ஓட்டும்போது அதிக பாதுகாப்பையும் நெகிழ்வுத்தன்மையையும் வழங்கும் என்பதற்காக பல பெண் சாரதிகள் இதனைக் கோரியுள்ளனர்.

இந்த வசதியானது, இலங்கையில் கார்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது பெண்களுக்கான பாதுகாப்பான மற்றும் நெகிழ்வான வருவாய் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான Uberஇன் தொடர்ச்சியான முயற்சியின் ஒரு பகுதியாகும். சாரதிகள் இந்த வசதியை எப்போது வேண்டுமானாலும் செயற்படுத்தலாம் அல்லது முடக்கிவிடலாம். இந்த வசதியை அவர்கள் விரும்பும் நேரத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கான முழுமையான கட்டுப்பாடு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதிக பயணங்களை மேற்கொள்ளவும் அதிக மணித்தியாலங்களுக்கு வாகனம் ஓட்டவும் மற்றும் வருவானத்தை அதிகரிப்பதற்கும் இந்த வசதி அவர்களுக்கு உதவும்.

## APB இன் 35ஆவது ஆண்டுவிழா மாநாட்டுடன் பங்குதாரராக இணைந்த NDB வங்கி



NDB வங்கியானது அண்மையில் கொழும்பு, சினமன் லைஃப் - வோட்டர்ஃபிரண்டில் நடைபெற்ற இலங்கை தொழில்சார் வங்கியாளர்கள் சங்கத்தின் (APB) 35 ஆவது ஆண்டு விழாவில் சங்கத்தின் பங்குதாரராக பெருமிதத்துடன் பங்கேற்றது. இலங்கையின் பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்தல் மற்றும் நிலையான மீட்சி மற்றும் வளர்ச்சியில் வங்கியின் பங்கு எனும் கருப்பொருளில் நடைபெற்ற இந்த மைல்கல் நிகழ்வானது இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்காக இணைந்து பணியாற்றும் வகையில் பிரதம நிறைவேற்றதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினர் உட்பட 300க்கும் மேற்பட்ட வங்கியியல் தொழில்சார் நிபுணர்களை ஒன்றிணைப்பதாக அமைந்திருந்தது.

1988 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட APBயானது வங்கியியல் துறையில் முழுவதும் 2,500க்கும் மேற்பட்ட வங்கியியல் தொழிற்றகைமையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதன்மையான தொழில்சார் அமைப்பாகத் திகழ்கிறது. இந்த அமைப்பானது அறிவை மேம்படுத்தவும் புத்தாக்கங்களை விருத்தி செய்வதற்கும் மற்றும் நிதியியல் துறையில் தலைமைத்துவத்தை அபிவிருத்தி செய்யவும் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகிறது. கடந்த 35 ஆண்டுகளில் APB வருடாந்த மாநாடானது தொழில்சார் உரையாடல்கள், அறிவுப் பகிர்வு மற்றும் தொழில்சார் அபிவிருத்தி ஆகியவை தொடர்பாக மிகவும் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வாக மாறியுள்ளது. இந்த வருடத்துக்கான மாநாட்டின் தேசிய முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அதிக விருதுகளைப் பெற்ற நிறுவனமாக LMDயால் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ள கொமர்ஷல் வங்கி

''கொமர்ஷல் வங்கியானது 2024 ஆம் ஆண்டில் இலங்கையில் அதிக விருதுகளைப் பெற்ற நிறுவனமாக LMDயால் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான கொமர்ஷல் வங்கியானது தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக இந்த விருதைப் பெறுகிறது.

LMD சஞ்சிகையின் ஆய்வு மற்றும் நிறுவனத்தின் சரிபார்ப்பின் அடிப்படையில் LMD இன் கூற்றுக்கிணங்க கொமர்ஷல் வங்கி மொத்தம் 115 விருதுகளுடன் நாட்டின் சிறந்த பெருநிறுவனங்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

எமது ஆய்வானது 496 விருது பெற்ற நிறுவனங்களை அடையாளம் கண்டுள்ளதுடன் இந்த எண்ணிக்கையானது முந்தைய பதிப்பில் இடம்பெற்ற 227 நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது இரண்டு மடங்கு அதிகமாகும். மொத்தமாக 2,831 விருதுகளைப் பெற்றுள்ளது" என்று LMD தெரிவித்துள்ளது.

LMD இன் 2024 சிறப்பு பதிப்புகளில் இடம்பெற்றுள்ள நிறுவனங்கள் வென்ற விருதுகளின் விரிவான பட்டியலை இந்த ஆய்வு தொகுத்துள்ளதாக LMD சஞ்சிகை தெரிவித்துள்ளது. அதாவது, வருடாந்த வர்த்தக நாமம், மிகவும் மதிக்கப்படும், பெருநிறுவனப் பிரிவு (இதில்பெரு நிறுவன மகிழ்ச்சி குறியீடு அல்லது CHI மற்றும் இலங்கையில் சிறந்த பணியிடங்கள் அடங்கும்) மற்றும் LMD 100 (2023/24).

## Baurs நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் மாற்று பணிப்பாளராக கிஹான் செனெவிரட்ன நியமனம்



பல்வேறு தொழிற்றுறைகளில் முன்னோடியும் புத்தாக்க செயற்பாட்டாளருமான இலங்கையின் பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரங்களில் ஒன்றாக அமைந்துள்ள Baurs என அறியப்படும் A. Baur & Co. (Pvt.) Ltd, தனது பணிப்பாளர் சபையின் மாற்றுப் பணிப்பாளராக கெஹான் செனெவிரட்னவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. இது செனெவிரட்னவின் பரந்த தொழில் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாகவும் அமைந்துள்ளது.

தமது ஒப்பற்ற அர்ப்பணிப்பு மற்றும் அதிசிறந்த தலைமைத்துவ திறன்களைப் பிரதிபலிக்கும் இந்த உயர் நிலைக்கப்பால் செனெவிரட்ன தொடர்ந்தும், A. Baur & Co. (Pvt.) Ltd இன் முன்னணி துணை நிறுவனமான Baur Life Sciences (Pvt.) Ltd இன் பணிப்பாளராக செயலாற்றுவார். நிறுவனத்தை நிலைபேறான வளர்ச்சி மற்றும் புத்தாக்கத்தை நோக்கி கொண்டுசெல்வதற்கு அவரின் இந்த இரட்டை பொறுப்புகள் முக்கியத்துவம் வாய்ந்த நிலையை வகிக்கும்.

கெஹானின் நிபுணத்துவ தொழில் வாழ்வில், அவர் GlaxoSmithKline, Merck Sharpe & Dohme மற்றும் Baur Life Sciences ஆகியவற்றில் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. மருந்தாக்கல் துறையில் அவர் கொண்டுள்ள ஆழமான அனுபவம் மற்றும் உறுதியான தலைமைத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது. அவரது தொலைநோக்கு அணுகுமுறை பல புதுமையான தயாரிப்புகளை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது. மருந்துத் துறையில் மரியாதைக்குரிய சிந்தனைத் தலைவராக அவருக்கு அங்கீகாரத்தைப் பெற்றுத்தந்துள்ளது.

கெஹான செனெவிரட்ன தமது நிலையில் ஆழமான அனுபவத்தைக் கொண்டுள்ளார். குறிப்பாக, பல்வேறு நிறுவனங்களில் பல தலைமைத்துவ நிலைகளையும் வகிக்கின்றார். அதில் இலங்கை மருந்தாக்கல் தொழிற்றுறை சம்மேளனத்தின் (SLCPI) அங்கத்தவர் மற்றும் இலங்கை மருத்துவ சாதனங்கள் தொழிற்றுறை சம்மேளனத்தில் (SLCMDI) பணிப்பாளர், பொது உறவுகள் தவிசாளர், செயலாளர் மற்றும் உப தலைவர் போன்ற நிலைகள் அடங்கியிருந்தன. மேலும், இலங்கை மருந்துப் பொருட்கள் ஊக்குவிப்பாளர் சம்மேளனத்தின் (PPA) கௌரவ செயலாளர் மற்றும் தலைவர் ஆகிய நிலைகளையும் கெஹான் வகித்துள்ளார்.

இலங்கை பணிப்பாளர் நிறுவகத்தின் (SLID) அங்கத்தவராகவும் கெஹான் திகழ்கின்றார். இவர் அவுஸ்திரேலியாவின் எடித் கோவன் பல்கலைக்கழகத்தில் வியாபார நிர்வாக மாஸ்டர்ஸ் (சர்வதேச வியாபாரம்) பட்டத்தையும் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தின் (SLIM) பட்டப்பின்படிப்பு சந்தைப்படுத்தல் டிப்ளோமாவையும் கொண்டுள்ளார்.

## மெல்பேர்ன் புதுவருட விழாவில் P&S



இலங்கையின் மிகப்பெரிய விரைவுச் சேவை உணவகச் சங்கிலியான பெரேரா அன்ட் சன்ஸ் (Perera & Sons - P&S), அண்மையில் இடம்பெற்ற மெல்பேர்ன் புதுவருட விழாவில் புதுவருட பண்டிகையை வாடிக்கையாளர்களுடன் இணைந்து கொண்டாடியது. Dandenong Showroom (டான்டினாங் காட்சியறையில்) இடம்பெற்ற இந்த நிகழ்வானது மெல்பேர்ன் சமூக நிகழ்வுகளில P&S முதன் முறையாக பங்கேற்ற நிகழ்வாகும். அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கை சமுகத்தினருடன் தமது பாரம்பரிய சுவைகளை இவ்வர்த்தகநாமம் பகிர்ந்து கொண்டது.

இனிப்பு, காரம் மற்றும் பிரபல பலகாரங்கள் என 20க்கும் மேற்பட்ட உணவுப் பொருட்களைக் கொண்ட P&S உணவுக் கூடத்தில், இலங்கையை நினைவூட்டும் பல்வேறு உணவுகள் வழங்கப்பட்டன. இந்தக் கூடமானது ஒரு பாரிய கூட்டத்தைக் கவர்ந்ததோடு, பங்கேற்பாளர்களிடமிருந்து அற்புதமான கருத்துகளையும் பெற்று அவர்களது கவனத்தை ஈர்த்தது. அவர்கள் ஒவ்வொரு உணவைச் சுவைக்கும்போதும் தாம் இலங்கையில் வாழும் உணர்வைப் பெற்றனர். இந்நிகழ்வில் P&S பணிப்பாளர் அவிஷ்க பெரேரா மற்றும் நிறுவனத்தின் முக்கிய நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.

## 'லிங்க் கேஷ குமரிய - 2025' நிகழ்வின் மூலம் பெண்களை மேலும் வலுவூட்டும் லிங்க் கேஷா




லிங்க் கேஷா வர்த்தக நாமத்தால் முன்னெடுக்கப்பட்ட அனைவரதும் எதிர்பார்ப்புக்குரிய புத்தாண்டு அழகி நிகழ்வான 'லிங்க் கேஷ குமரிய - 2025', அண்மையில் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நிறைவடைந்திருந்தது. தொடர்ச்சியாக 3ஆவது வருடமாக இடம்பெற்ற இந்த நிகழ்வானது, இலங்கைப் பெண்களின் பன்முக அழகை மேம்படுத்துவதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் மற்றும் கொண்டாடுவதற்குமான ஒரு தளம் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது.

2,000 இற்கும் அதிக விண்ணப்பங்களின் மூலம் கடந்த மார்ச் மாதத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போட்டியானது, முக்கிய எதிர்பார்ப்பு மிக்க ஒரு நிகழ்வாக பின்தொடரப்பட்டு வந்தது. வீடியோ நேர்காணல்கள் மற்றும் நேரடி நேர்முகப் பரீட்சைகளை உள்ளடக்கிய தெரிவுச் செயன்முறை மூலம் 25 திறமையான போட்டியாளர்கள் ஆரம்ப கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இந்தப் பங்கேற்பாளர்கள் நிபுணர்கள் தலைமையிலான அழகுபடுத்தல் மற்றும் ஆளுமை மேம்பாட்டுப் பயிற்சியை பெற்றுக் கொண்டனர்.

இதன் மூலம் 15 பேரரை தேர்ந்தெடுக்கும் மட்டத்துக்கு அது முன்னேறியது. Manhunt International மற்றும் Face of Beauty International Sri Lanka ஆகியவற்றின தேசிய பணிப்பாளரான அர்ஜுன சேனநாயக்கவின் நிபுணத்துவம் மிக்க நடனக் கலையின் கீழ், போட்டியாளர்கள் நம்பிக்கை மிக்க இளம் யுவதிகளாக தங்களை மேம்படுத்தி, போட்டியின் மையத் தளமான மேடைக்கு வரத் தயார்படுத்தப்பட்டனர்.

லிங்க் கேஷா பேஸ்புக் பக்கம் மற்றும் லிங்க் நெச்சுரல் யூடியூப் சனல் போன்ற சமூக ஊடகங்களில் நேரடியாக ஒளிபரப்பப்பட்ட லிங்க் கேஷ குமரிய 2025 நிகழ்வின் பிரமாண்டமான இறுதிப் போட்டியானது, திறமை, கருணை, நம்பகத்தன்மையை வெளிப்படுத்தும் விதமாக அமைந்தது.

www.thamilan.lk
புதன்கிழமை, ஏப்ரல் 23, 2025
தமிழன்





# பாப்பரசரின் பூதவுடல் 27இல் நல்லடக்கம்

## இறுதி நிகழ்வில் ட்ரம்ப் - ஸெலென்ஸ்கி - மெக்ரோன் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பங்கேற்பு





கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமை மதகுருவும் திருச்சபையின் 266ஆவது தலைவருமான பாப்பரசர் பிரான்சிஸ் தனது 88ஆவது வயதில் திங்களன்று (21) காலமானார். மறைந்த பாப்பரசர் பிரான்சிஸின் பூதவுடல் அவர் வசித்த சாண்டா மார்டா இல்லத்தில் அஞ்சலிக்காக திறந்த பேழையில் சிவப்பு அங்கிகளுடன் பிஷப் ஆடை அணிவிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. பாப்பரசரின் மறைவுக்கு உலகத் தலைவர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

### இறுதிக் கிரியைகள் சனிக்கிழமையன்று

இந்நிலையில், பாப்பரசரின் இறுதிச் சடங்குக்கான திகதியை கார்டினல்கள் அறிவித்துள்ளனர். அவரது இறுதிச் சடங்கு எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிச் சடங்கில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி, பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவெல் மெக்ரோன் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். உலகம் முழுவதும் பல்வேறு முக்கிய தலைவர்கள் கலந்து கொள்வார்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளாகவே உடல் உபாதைகளால் அவதிப்பட்டு வந்த அவர் அவ்வப்போது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சைபெற்று வந்தார். எனினும், தேவாலயப் பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார். இந்நிலையில், நிமோனியா மற்றும் சுவாசக் கோளாறு காரணமாக கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி இத்தாலியின் ரோமிலுள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சிறுவயதிலேயே கடுமையான நிமோனியாவால் பாதிக்கப்பட்ட பாப்பரசர் பிரான்சிஸுக்கு அப்போதே அறுவை சிகிச்சை மூலம் நுரையீரலின் ஒரு பகுதி அகற்றப்பட்டது. இதனால் தனது வாழ்நாள் முழுவதும் நுரையீரல் பாதிப்பால் அவதிப்பட்டுவந்த நிலையில், 2 நுரையீரல்களிலும் தொற்று பரவியது. இதைத் தொடர்ந்து 38 நாட்கள் சிகிச்சை பெற்ற அவர் உடல்நலம் தேறிய நிலையில் கடந்த மார்ச் 23ஆம் திகதி மருத்துவமனையிலிருந்து வத்திக்கானிலுள்ள தமது வீட்டுக்குத் திரும்பினார். எனினும், தொடர்ந்து மருத்துவர்களின் கண்காணிப்பிலேயே இருந்து வந்தார். இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (20) உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு வத்திகானின் செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் நடந்த சிறப்பு திருப்பலியில் அவர் பங்கேற்றார்.

சக்கர நாற்காலியில் அழைத்துவரப்பட்ட பாப்பரசர், 35 ஆயிரத்துக்கும் மேல் கூடியிருந்த மக்களுக்கு ஈஸ்டர் வாழ்த்துக் கூறி ஆசீர்வதித்தார். அதைத் தொடர்ந்து அவரது ஈஸ்டர் செய்தி வாசிக்கப்பட்டது.

### கடவுளின் இல்லத்துக்குத் திரும்பினார் பாப்பரசர்

இந்நிலையில், ஈஸ்டர் தினமான நேற்றுமுன்தினம் (21) உள்ளூர் நேரப்படி காலை 7.35 மணிக்கு பாப்பரசர் பிரான்சிஸ் காலமானார். பிரான்சிஸ் வாழ்ந்த டோமஸ் சான்டா மார்ட்டா தேவாலயத்திலிருந்து வத்திக்கான் காமெர்லெங்கோ கர்தினால் கெவின் பெரெல் இத்தகவலை உறுதிப்படுத்தினார். அவர் வெளியிட்ட அறிவிப்பில்,

''புனித தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவை ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவிக்கிறேன். இன்று (திங்களன்று) காலை 7.35 மணியளவில் ரோம் பிஷப் பிரான்சிஸ் அவர்கள், தந்தையின் இல்லத்துக்குத் (கடவுள்) திரும்பினார். அவரது வாழ்நாள் முழுவதும் இறைவனுக்கும் அவருடைய திருச்சபைக்கும் அர்ப்பணிக்கப்பட்டது. நற்செய்தியின் விழுமியங்களை உண்மையோடும் தைரியத்தோடும் உலகளாவிய அன்போடும் குறிப்பாக, ஏழைகள் மற்றும் மிகவும் ஒதுக்கப்பட்டவர்களுக்காகவும் வாழ அவர் நமக்குக் கற்றுக் கொடுத்தார்'' எனத் தெரிவிக்கப்பட்டது

பாப்பரசரின் மறைவு அறிவிப்பைத் தொடர்ந்து, ரோம் முழுவதுமுள்ள தேவாலய கோபுரங்களில் மணிகள் ஒலிக்கப்பட்டன.

பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த 2013 மார்ச் 13இல் பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டார். அதன் மூலம் ‘முதலாவது லத்தீன் அமெரிக்கப் பாப்பரசர்’ என்ற பெருமையைப் பெற்றார். இவருக்கு முன்பாக பாப்பரசராக இருந்த 16ஆம் பெனடிக் திடீரென இராஜிநாமா செய்திருந்தார். 600 ஆண்டுகளுக்குப் பின்னர் பாப்பரசரொருவர் தனது பதவியை இராஜிநாமா செய்ததால் திருச்சபையின் நெருக்கடியான காலகட்டத்தில் பதவியேற்ற பாப்பரசர் பிரான்சிஸ் தனது சிறப்பான நிர்வாகத்தால் வத்திக்கானின் பெருமையை மீட்டெடுத்தார்.

### யார் இந்த ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ?

1936ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி ஆர்ஜென்ரீனாவின் பியூனஸ் அயர்சில் பிறந்தவர் பாப்பரசர் பிரான்சிஸ். இவரது இயற்பெயர் ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ. மாரியோ - ரெஜினா சிவோரி தம்பதியின் 5 குழந்தைகளில் மூத்தவர். ஆர்ஜென்ரீனாவில் 1969இல் ஜேசுட் பாதிரியாராக நியமிக்கப்பட்ட பிரான்சிஸ் பல்வேறு பொறுப்புகளைத் தொடர்ந்து 1992இல் பியூனஸ் அயர்சின் ஆர்ச் பிஷப் ஆக உயர்ந்தார். 2001ஆம் ஆண்டு பெப்ரவரி 21இல், 2ஆம் ஜோன் போல் மூலம் இவர் கர்தினாலாக அறிவிக்கப்பட்டார். 2013 மார்ச் 13இல் 266ஆவது பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## ‘காதல் கைகூடாததால் பாதிரியாரான பாப்பரசர் பிரான்சிஸ்’

### - இரகசியம் உடைத்த காதலி அமலியா



### நிராகரிப்பில் முடிந்த இளமைக்கால காதல்!

''உன்னைத் திருமணம் செய்யவில்லையென்றால் பாதிரியாராகச் செல்வேன்'' என பாப்பரசர் பிரான்சிஸ் தனது காதலிக்காக இளமைக் காலத்தில் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் காதல் நிராகரிப்பில் முடிந்ததாலோ என்னவோ கடிதத்தில் அவர் எழுதியதன்படியே அவரின் எதிர்காலமும் அமைந்துவிட்டது.

ஆர்ஜென்ரீனாவில் பிறந்த பாப்பரசர் பிரான்சிஸ், 2013 முதல் 12 ஆண்டுகளாக கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமை மதகுருவாகவாக பொறுப்பு வகித்தார்.

ஆர்ஜென்ரீனாவில் பிறந்த பாப்பரசர் பிரான்சிஸ், தனது 22ஆவது வயதில் கிறிஸ்தவ சமுதாயத்துக்காக சேவையாற்றத் தொடங்கினார். அவரின் தலைமையின்கீழ் கத்தோலிக்கத் திருச்சபை புத்துணர்ச்சி பெற்றதெனலாம். ஆனால், நீண்ட காலத்துக்கு முன்பே விசுவாசத்தின் மீதான அவரின் நம்பிக்கை தனிப்பட்ட விடயத்திலிருந்து தொடங்கியுள்ளது.

ஆர்ஜென்ரீனாவின் தலைநகரான புயூனஸ் ஐரிஸிலுள்ள மெம்பிரில்லர் வீதியில் ஆரம்ப நாட்களைக் கழித்த மரியோ பெர்கோக்லியோ, 12 வயதாக இருக்கும்போது அதே வீதியில் வசித்த அமலியா டாமோன்டே என்பவருக்கு காதல் கடிதம் கொடுத்துள்ளார்.

பல ஆண்டுகள் கழித்து ‘ஏபி’ செய்தி நிறுவனத்துக்கு அமலியா டாமோன்டே அளித்த நேர்காணலில், பெர்கோக்லியோ அளித்த கடிதத்தை நினைவுகூர்ந்தார்.

இது குறித்து அமலியா தெரிவிக்கையில்,

''அவர் எழுதிய கடிதம் இப்போதும் எனக்கு நினைவிருக்கிறது. ஒரு காகிதத்தில் வெண்மை நிற வீட்டை வரைந்திருந்தார். அதன் மேற்கூரை சிவப்பு நிறத்தில் இருந்தது. எதிர்காலத்தில் நம் திருமணத்துக்குப் பின்னர் உனக்காக நான் வாங்கப்போகும் வீடு இது என அக்கடிதத்தில் எழுதியிருந்தது. நான் உன்னைத் திருமணம் செய்யவில்லையென்றால், பாதிரியாராகச் சென்றுவிடுவேன் எனவும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.''

''இது குழந்தைத்தனமான செயல்கள்; அதற்குமேல் வேறொன்றுமில்லை'' என பிற்காலத்தில் அளித்த நேர்காணலில் அமலியா பகிர்ந்துகொண்டார்.

''அந்த வயதில் என்னுடைய பெற்றோர் மிகவும் கண்டிப்புடன் இருந்தனர். அதனால் அக்கடிதம் பிற்காலத்தில் கவனிக்கப்படாமலேயே போனது'' எனக் குறிப்பிட்டார்.

''ஒரு பையனிடமிருந்து உனக்குக் கடிதம் வருகிறதா?'' என ஆவேசத்துடன் பேசி என்னை பாடசாலைக்கு அழைத்துச் சென்றுவிட்டார் என் தாய். அதன்பின்னர் நாங்கள் இருவரும் சந்திக்காதபடி என் தாய் என்னை விலக்கியே வைத்திருந்தார்'' என அமலியா நினைவுகளைப் பகிர்ந்தார்.

நீண்ட காலத்துக்குப் பின்னர் பெர்கோக்லியோ (பாப்பரசர் பிரான்சிஸ்) குடும்பம் மெம்பிரில்லர் வீதியிலிருந்து விலகிச் சென்றது. மறுபுறம், அமலியா டாமோன்டேவுக்கும் திருமணம் நடைபெற்றது. அதன்பின்னர் அமலியா டாமோன்டே மீண்டும் அவரைத் தொடர்புகொள்ள நினைக்கவில்லை. தனது கடைசி ஈஸ்டர் செய்தியிலும் வத்திக்கான் மக்களுக்காக மட்டுமன்றி உலக மக்களின் நலனையும் குறிப்பிட்டு, உலகில் அமைதியை நிலைநாட்ட வலியுறுத்தினார், இரக்கம் மற்றும் பணிவின் உருவமாக இருந்த பாப்பரசர் பிரான்சிஸ்.

### ஆர்ஜென்ரீனாவுக்குத் திரும்பவே இல்லை

பாப்பரசர் பிரான்சிஸ் இத்தாலிக்கு வெளியே 65 நாடுகள் மற்றும் பிராந்தியங்களுக்குப் பயணித்த நிலையில் சொந்த நாடான ஆர்ஜென்ரீனாவுக்கு ஒருபோதும் திரும்பச் செல்லவில்லை.

ஆர்ஜென்ரீனாவின் பியூனஸ் அயர்ஸ் நகரில், இத்தாலியைப் பூர்விகமாகக்கொண்ட குடும்பத்தில் பிறந்த பாப்பரசர் பிரான்சிஸ், முந்தைய பாப்பரசர் பெனடிக்டின் பதவி விலகலுக்குப் பின்னர், பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

கடந்த 12 ஆண்டுகள் பாப்பரசர் பதவிக் காலத்தில் இத்தாலிக்கு வெளியே 65 நாடுகள் மற்றும் பிராந்தியங்களுக்குப் பயணித்தவர், சொந்த நாடான ஆர்ஜென்ரீனாவுக்கு ஒருபோதும் திரும்பச் செல்லவில்லை.

### பாப்பரசராக 12 ஆண்டு கால பணி

பாப்பரசராக அவர் தனது 12 ஆண்டு கால பதவியில் வத்திக்கானில் பல்வேறு சீர்த்திருத்தங்களை மேற்கொண்டார்.

அவரது மறைவு உலகம் முழுவதுமுள்ள 140 கோடி கிறிஸ்தவ மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. உலகம் முழுவதும் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.



### செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் பாப்பரசரின் உடல்

வத்திக்கானில் அடுத்த 9 நாட்கள் நடக்கும் இறுதிச் சடங்கு நிகழ்வுகளுக்குப் பின்னர் பாப்பரசர் பிரான்சிஸின் உடல் அவரது விருப்பப்படி வத்திக்கானுக்கு வெளியே ரோம் நகரின் சான்டா மரியா மாகியோர் பசிலிக்காவில் அடக்கம் செய்யப்படவுள்ளது. முன்னதாக, செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக பிரான்சிஸின் உடல் வைக்கப்பட்டு பல்வேறு பாரம்பரிய சடங்குகள் நடத்தப்படும். அதைத் தொடர்ந்து பாரம்பரிய வழக்கப்படி புதிய பாப்பரசர் தெரிவுசெய்யப்பட்டு அறிவிக்கப்படுவார்.

### இறுதிச் செய்தி

எப்போதும் ஏழைகள், பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்த பாப்பரசர் பிரான்சிஸ், தனது இறுதிச் செய்தியாக ஈஸ்டர் அறிக்கையில், இஸ்ரேல்-ஹமாஸ், உக்ரைன்-ரஷ்யா போரை நிறுத்தி அமைதியை ஏற்படுத்த வலியுறுத்தியிருந்தார்.

### சான்டா மரியா மாகியோர் பசிலிக்காவில் பாப்பரசரின் உடல் அடக்கம் செய்யப்படுவது ஏன்?

பாப்பரசர் பதவியில் இருப்பவர்கள் பெரும்பாலும் வத்திக்கானில்தான் அடக்கம் செய்யப்படுவது வழக்கம். 2024 நவம்பரில் பாப்பரசர் பிரான்சிஸ் தனது இறுதிச் சடங்குக்குப் பயன்படுத்தப்படும் சடங்குகளை சீர்திருத்தினார். அவர் தன்னை வத்திக்கானுக்கு வெளியே அடக்கம் செய்ய அனுமதித்தார். ரோம் நகரிலுள்ள சான்டா மரியா மாகியோர் பசிலிக்காவில் தனது உடலை அடக்கம் செய்ய ஏற்கனவே பிரான்சிஸ் தெரிவுசெய்துள்ளார். அங்கு அவருக்குப் பிடித்த கன்னி மேரியின் சின்னமான சாலுஸ் பாபுலி ரோமானி உள்ளது.

பாப்பரசரொருவர் மறைந்தாலோ அல்லது தமது பதவியை இராஜிநாமா செய்தாலோ, வத்திக்கானின் நிர்வாகப் பொறுப்பை கார்டினல்கள் குழு ஏற்கும். அதன்படி, தற்போது அக்குழுவினர் வத்திக்கான் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ளனர். பாப்பரசரின்

இறுதிச் சடங்கு மற்றும் புதிய பாப்பரசர் தெரிவுசெய்வதற்கான நடைமுறைகளை இவர்கள் மேற்கொள்வார்கள். பாப்பரசர் மறைந்தது முதல் புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வது வரை இடைக்கால நிர்வாகத்தில் (Interregnum) வத்திக்கான் இருக்கும்.

பாப்பரசர் பிரான்சிஸின் மறைவைத் தொடர்ந்து, வத்திக்கானில் அவர் வாழ்ந்த இல்லம் பூட்டப்பட்டது. தேவாலயங்களில் 9 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

### அடுத்த பாப்பரசர் எவ்வாறு தெரிவுசெய்யப்படுவார்?

பாப்பரசர் பிரான்சிஸின் மறைவையடுத்து, அவரின் உடலை நல்லடக்கம் செய்யும் பணிகள் முதலில் நடத்தி முடிக்கப்படும்.

பின்னர். சில நாட்களில் புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதற்காக உலகம் முழுவதும் இருந்து 135 கார்டினல்கள் (சிவப்பு நிற தொப்பியணிந்த கிறிஸ்தவ மத குருமார்கள்) வத்திக்கானுக்கு வரவழைக்கப்படுவர்

உலகில் தற்போது 252 கார்டினல்கள் உள்ளனர். ஆனால், 80 வயதுக்கு மேற்பட்டவர்களால் பாப்பரசர் தெரிவுக்கு வாக்களிக்க முடியாது. அதன்படி, 135 கார்டினல்கள் மட்டுமே வாக்காளர்களாகத் தகுதி பெற்றுள்ளனர். இதில் 108 பேர் பாப்பரசர் பிரான்சிஸால் நியமிக்கப்பட்டவர்களாவர்.

வத்திக்கானின் ‘செயின்ட் பீட்டர்ஸ் பசிலிக்கா’ தேவாலயத்தையொட்டிய ‘சிஸ்டைன்’ தேவாலயத்தில் நடைபெறும் வாக்கெடுப்பு நடைமுறையில் இந்த 108 கார்டினல்கள் வெளியுலகத் தொடர்பின்றி பங்கேற்பர்.

மூடப்பட்ட அறையில் ஒவ்வொரு நாளும் 4 தடவைகள் வாக்கெடுப்பு நடைபெறும். புதிய பாப்பரசர் பிரான்சிஸாக தெரிவாகும் கார்டினல் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள் பெற வேண்டும். இந்த நடைமுறை சில நாட்கள் வரையிலும் நீடிக்கும். ஒவ்வொரு வாக்கெடுப்பின் நிறைவிலும், அந்த வாக்கெடுப்பில் பதிவான வாக்குச்சீட்டுகள் எரிக்கப்படும்.

தேவாலயத்தில் இணைக்கப்பட்டுள்ள புகைக்கூண்டில் புகையை வெளியேற்றி முடிவுகள் அறிவிக்கப்பட்டும். கரும்புகை வெளியானால், புதிய பாப்பரசர் இன்னும் தெரிவாகவில்லை என்றும் வெள்ளை புகை வெளியானால், புதிய பாப்பரசர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொருளாகும்.

புதிய பாப்பரசர் தெரிவு குறித்து புகைக்கூண்டில் வெளியாகும் புகையின் நிறம் மூலம் அறிந்துகொள்வதற்காக செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் ஏராளமான மக்கள் கூடியிருப்பர்.

வாக்கெடுப்பில் பெரும்பான்மை பெற்ற கார்டினல், பாப்பரசர் பதவியை ஏற்பதை உறுதிப்படுத்த வேண்டும். பின்னர், பாப்பரசர் பதவிக்கான தனது பெயரை அறிவிக்க வேண்டும். தொடர்ந்து, அவர் செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தின் மாடத்தில் பாப்பரசராக வெள்ளை உடையணிந்து தோன்றி, மக்களுக்கு ஆசி வழங்குவார்.

வாக்களிக்கத் தகுதிபெற்ற கார்டினல்களில் அதிகபட்சமாக ஐரோப்பிய கண்டத்தைச் சேர்ந்தவர்கள் 53 பேர் உள்ளனர். ஏனையோர் ஆசியா (23 பேர்), லத்தீன் அமெரிக்கா (21 பேர் ), ஆபிரிக்கா (18 பேர்), வட அமெரிக்கா (16 பேர் ), ஓஷியானிய நாடுகள் (4 பேர்) ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

# தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பக்கச்சார்பானவை

## இ.தொ.கா. பொதுச் செயலாளர் ஜீவன் குற்றச்சாட்டு

*(மஸ்கெலியா நிருபர்)*



தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பக்கச்சார்பானவையாக அமைந்துள்ளன என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் தேர்தல் ஆணைக் குழுவினருக்குமிடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைத்தார்.

''தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாகவும் ஜனநாயக ரீதியாகவும் இயங்க வேண்டிய ஒரு அமைப்பாகும். எனினும், தேர்தல் ஆணைக்குழுவின் பக்கச்சார்பான செயற்பாடுகள் கவலையளிக்கின்றன''- எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியதாவது,

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், இவ்வாறான கலந்துரையாடலொன்றை நடத்துவதில் எந்த நன்மையும் இல்லை.

மேலும் வேட்புமனுத் தாக்கல் செய்தபோது சில சபைகளின் வேட்புமனுக்கல் நிராகரிக்கப்பட்டன. அச்சபைகளை நீதிமன்றத்தின் மூலம் மீளப் பெற்றுள்ளோம். சில சபைகள் தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளோம்.

அத்தோடு, மஸ்கெலியா உள்ளூராட்சி மன்றங்களுக்கான இ.தொ.காவின் வேட்புமனு ஏன் நிராகரிக்கப்பட்டதென்று தேர்தல் ஆணையாளரிடம் வினவியபோது, அங்கீகரிக்கப்பட்ட நபர் வேட்புமனு தாக்கல் செய்யாமல் வேறு நபர் தாக்கல் செய்யப்பட்டமையால் நிராகரிக்கபட்டதெனப் பதிலளிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக எங்களுடைய கட்சியிலே வேட்புமனு கையளிக்க அங்கீகரிக்கப்பட்ட நபருக்கு சுகயீனம் கராணமாக அவரின் மருத்துவ சான்றிதழைச் சமர்ப்பித்து, அவருக்குப் பதிலாக நியமித்திருந்த மாற்று நபருக்கு சமாதான நீதவானின் சான்றிதழ் வழங்கியிருந்தும் எங்களுடைய கட்சியின் மஸ்கெலியா பிரதேச சபையின் வேட்புமனுவை நிராகரித்திருந்தனர். இது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரிடம் வினவியபோது அவர் அதற்கு எவ்வித பதிலும் வழங்கவில்லை.

மேலும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் பிரசாரங்களின் போது உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெறும் எங்களுடைய (தே.ம.ச.) கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கே நிதியொதுக்கீடு மேற்கொள்வேனென்றும் மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் தொடர்பாக யோசிப்போமென்றும் கூறிவருகின்றார். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது" – என்றார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க முயற்சி

## தங்கையா பிரதீபன் தெரிவிப்பு

*(ராமு தனராஜா)*



இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பதுளை தேர்தல் தொகுதியில் எங்களது பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக்கொள்வதற்கான ஒரு செயற்பாட்டை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இன்று உங்களுக்குத் தெரியும் எங்களது நேரடி வேட்பாளர்களும் பட்டியல் வேட்பாளர்களும் தோட்டப் புறத்திலே லயத்து வாழ்க்கையைச் சுவாசிக்கக்கூடிய இளைஞர், யுவதிகள், அரசியல் துறையைச் சார்ந்தவர்கள், தொழிற்சங்கவாதிகள், தோட்டத் தொழிலாளர்கள் எனப் பல்வேறுபட்ட சமூகத்தில் நற்பிரஜைகளுக்கான வாய்ப்பை வழங்கியுள்ளோம்"- எனத் தொழிலாளர் தேசிய சங்கப் பசறைத் தொகுதி அமைப்பாளரும் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் பசறை பிரதேச சபைக்கு போட்டியிடுபவருமான தங்கையா பிரதீபன் தெரிவித்தார். தொழிலாளர் தேசிய சங்கக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று தமிழ் முற்போக்குக் கூட்டணியை விமர்சனம் செய்துகொண்டிருக்கும் நபர்கள் கடந்த காலங்களில் பிரதேச சபையினூடாக என்னென்ன வேலைத்திட்டங்கள் செய்திருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும்.

இன்றுதான் அவர்கள் தோட்டப்புறங்களுக்கே காலடி எடுத்து வைத்துள்ளார்கள். இருப்பினும், அவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிப்பதற்கு மக்கள் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள்.

எங்களுடைய நோக்கம் இந்த விம்பத்தை உடைத்தெறிந்து மடக்கும்பரை லயத்து வாழ்க்கையிலிருந்து பாராளுமன்றம் சென்றவர் தான் எங்களுடைய தலைவர் பழனி திகாம்பரம். அதைப் போன்று தான் எங்கள் கட்சியில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களும் லயத்திலிருந்து சென்றவர்கள் தான். அவர்களை சபைக்கு கொண்டுவருவதற்காகவே மக்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் அவர்கள், நாங்கள் வாக்குகளை சிதறடிக்கிறோமென்று விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள் . எனவே, எதிர்வரும் 06ஆம் திகதி பசறை, பதுளை, லுணுகலை பகுதிகளில் வாழும் மக்கள் இதற்கான தகுந்த பதிலடியை- சரியான பாடத்தை இவர்களுக்குப் புகட்டுவார்கள். பசறை, பதுளை, லுணுகலை ஆகிய பிரதேச சபைகளில் தீர்மானிக்கும் சக்தியாக நாம் மாறவிருக்கின்றோம்.

எனவே, உங்களது வாக்குகளை வழங்கி உங்களைப் போல் லயத்து வாழ்க்கை வாழ்கின்ற இளைஞர்களுக்கு அரசியலில் ஒரு களம் அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

அதேபோல, உங்களுக்குத் தெரியும் உங்களது அரசாங்கத்திலே பாரதப் பிரதமர் இலங்கைக்கு வருகை தந்த போது அவர் எங்கள் தலைவர்களையும் சந்தித்தார்.எங்களது தலைவர்கள் மலையக மக்களது பிரச்சினைகளை பாரதப் பிரதமருக்கு எடுத்துக்கூறியிருந்தார்கள். ஆனால் இம்முறை அரசாங்கத்தில் இருக்கின்ற எந்த ஒரு மலையகப் பிரதிநிதிகளையும் பாரதப் பிரதமர் சந்திக்கவில்லை''- என்றார்.

# புதிதாக சேர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சித் திட்டம் ஆரம்பம்





*(எம்.ஏ.எம்.ஹசனார்)*

ஊவா மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு புதிதாக சேர்க்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கான அறிமுகப் பயிற்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் (21) மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

294 ஆசிரியர்கள் ஆசிரியர் பணியில் நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, இவற்றுள் 34 பேர் கல்விப் பட்டப்படிப்பை முடித்து பட்டதாரிகளுக்கான தேர்வின் மூலம் ஆசிரியர்களாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

புதிதாக சேர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்கான அறிமுகப் பயிற்சித் திட்டத்தில் ஊவா மாகாண ஆளுநர் சட்டத்தரணி கபில ஜெயசேகர கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்நிகழ்வில் பிரதம செயலாளர் மகேஷ் லசந்த கம்மன்பில, மாகாணக் கல்விச் செயலாளர் நிஹால் குணரத்ன மற்றும் பிற அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# பூண்டுலோயா வாகன விபத்தில் ஒருவர் காயம்



*(நீலமேகம் பிரசாந்த்)*

பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெரோ கீழ்ப் பிரிவில் இரண்டு கொங்கிரீட் கலவை இயந்திர வாகனங்கள் நேற்றுக்காலை (22) விபத்துக்குள்ளாகின.

ஹெரோ கீழ்ப் பிரிவில் கட்டப்படும் கட்டிடமொன்றுக்குச் சென்ற கொங்கிரீட் கலவை இயந்திர வாகனம் பாதையை விட்டு விலகி மற்றொரு கொங்கிரீட் கலவை இயந்திர வாகனத்தின் மீது விழுந்துள்ளது.

இச்சம்பவத்தில் ஒரு கொங்கிரீட் வாகனச் சாரதி காயமடைந்த நிலையில், கொத்மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கதிர்காமம் செல்லும் வழியில் யானைகளின் தொல்லை

## யாத்திரிகர்கள் அசௌகரியம்

*(எம்.ஏ.எம்.ஹசனார்)*



கதிர்காமம் மற்றும் புத்தல வழியாக கதிர்காமத்துக்குச் செல்லும் யாத்திரிகர்களை யானைகளுக்கு உணவு போட வேண்டாம் என வன இலாகா அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கதிர்காமம், புத்தல வீதிகளில் பயணிப்போர் அடிக்கடி யானைத் தொல்லைகளுக்குள்ளாகி வருவதாகவும் இதனால் உயிர் ஆபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமுள்ளதாகவும் பயணிகள் கவலையும் விசனமும் தெரிவிக்கின்றனர்.

இவ்வீதிகளில் பயணிக்கும் ஒருசிலர் இப்பகுதியிலுள்ள காட்டு யானைகளுக்கு உணவுப் பொதிகளை வீசிவிட்டு செல்கின்றனர். இதனால் காட்டிலுள்ள யானைகள் கூட்டம் கூட்டமாக வீதிக்கு வருகின்றன. தவிரவும் பயணிப்போரின் வாகனங்களைத் தமது தும்பிக்கையால் இழுத்தும் பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றன.

எனவே, கதிர்காம் மற்றும் செல்லக் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்கள் யானைகளுக்கு உணவுப் பொதிகளைப் போடவேண்டாமென வன இலாகா அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். வன இலாகா அதிகாரிகளின் பணிப்புரையை மீறி பலர் அடிக்கடி காட்டு யானைகளுக்கு உணவுப் பண்டங்களை வீசுவதால் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் இதனால் போக்குவரத்துப் பாதிப்படைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வவுனியா விபுலானந்தா கல்லூரி மைதானப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## பிரதமர் ஹரிணி உறுதி

*(சி.திவியா)*



''வவுனியா விபுலானந்தா கல்லூரிக்கு விரைவில் விளையாட்டு மைதானம் பெற்றுக்கொடுக்கப்படும்'' - எனப் பிரதமரும் கல்வியமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டிலும் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகதீஷ்வரனின் ஒழுங்கமைப்பிலும் பாடசாலை அதிபர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (20) இரவு வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் பிரதமருடன் தனிப்பட்ட சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

இதன்போது, வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள விபுலானந்தா கல்லூரியில் 2000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றபோதும் அதற்கான ஒரு நிரந்தர மைதானம் இதுவரை இல்லை. மைதானத்துக்கான நிலமொன்றைக் கொள்வனவு செய்ய நீண்ட நாட்களாக பழைய மாணவர்கள், பெற்றோர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றபோதும் இதுவரை அது கைகூடவில்லை.

கடந்த காலங்களில் அரச அதிகாரிகள், பல அரசியல்வாதிகள் ஆகியோருடன் கலந்துரையாடி மைதானத்தைப் பெற பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தபோதும் இதுவரை அது கைகூடவில்லை.

தற்போதைய கல்வியமைச்சர் மற்றும் பிரதமர் என்ற அடிப்படையில் இப்பாடசாலையின் மைதானப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தருமாறு பாடசாலை நிர்வாகத்தால் பிரதமரிடம் கோரப்பட்டது.

பாடசாலை தொடர்பில் கேட்டறிந்த பிரதமர், மைதானப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படுமென்றும் மாணவர்களுக்கான மைதானம் விரைவில் பெற்றுத் தரப்படுமென்றும் இதன்போது உறுதியளித்தார்.

இச்சந்திப்பில் பிரதமருடன் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன் மற்றும் செ.திலகநாதன் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத கடற்றொழிலை தடைசெய்ய முன்னின்றவரின் மோட்டார் சைக்கிள் எரிப்பு

## இது தொடர்பில் பாராளுமன்றில் குரல்கொடுக்கவுள்ளதாக ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

*(விஜயரத்தினம் சரவணன்)*




முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முன்னின்று செயற்பட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணையத் தலைவர் அன்னலிங்கம் நடனலிங்கம் என்பவரின் மோட்டார் சைக்கிள் அண்மையில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களால் எரியூட்டப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி செயலகம், பிரதமர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோரிடம் தெரியப்படுத்துவதோடு, பாராளுமன்றத்திலும் இந்த விடயத்துக்காக குரல்கொடுக்கவுள்ளதாக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்தைக் கண்டித்து முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம், மீனவ ஒத்துழைப்பு இயக்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் (21) முல்லைத்தீவு மாவட்டசெயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இவ்வார்ப்பாட்டத்தில் பங்கேற்றதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களிடமிருந்து மகஜரொன்றையும் பெற்றுக்கொண்டார்.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

''தடைசெய்யப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம், குறிப்பாக, மீனவ இளைஞர்கள் தற்போது ஒன்றுசேர்ந்து செயற்பட்டு வருகின்றனர்.

இத்தகைய சூழலில் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் முன்னின்று செயற்பட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணையத்தலைவர் அன்னலிங்கம் நடனலிங்கம் என்பவருடைய மோட்டார் சைக்கிள் அண்மையில் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களால் திருடப்பட்டு எரியூட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உரியவர்கள் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளபோதும் இதுவரை பொலிஸார் உரிய சட்டநடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. இந்த விடயத்தில் பொலிஸார் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கத் தவறியுள்ளதாகக் கருதுகின்றேன்.

ஜனாதிபதி தன்னுடைய தொடக்க உரையில்கூட சட்டம், ஒழுங்கு பாதுக்கப்படுமெனத் தெரிவித்திருந்தார்.

இந்த விடயத்தில் சட்டம், ஒழுங்கு காப்பற்றப்படாத காரணத்தால் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்குமாறு கோரியே இங்கு மக்களோடு இணைந்து நாமும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எனவே, சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கவேண்டியவர்கள் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்.

எதிர்வரும் மே மாதம் 08, 09ஆம் திகதிகளில் பாராளுமன்ற அமர்விருக்கின்றது. அந்தவகையில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி செயலகம், பிரதமர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோரிடம் இந்த விடயத்தைத் தெரியப்படுத்துவதுடன், பாராளுமன்றத்திலும் இந்த விடயத்துக்கு குரல்கொடுப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்'' - என்றார்.

# மக்கள் விரும்பும் நாடாக இலங்கையை மாற்றுவோம்

## ஜெகதீஸ்வரன் எம்.பி.

*(வவுனியா நிருபர்)*



மக்கள் விரும்பும் நாடாக இலங்கையை மாற்றிக் காட்டுவோம் - என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்திருக்கின்றது. இங்கு இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு இடமில்லை. எமது நாட்டை பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்ய உழைக்கின்றோம். மக்கள் விரும்பும் நாடாக மாற்ற முயல்கின்றோம்.

தற்போது பல கட்சிகள் போலியான பிரசாரங்களை முன்வைக்கின்றன. நாங்கள் மக்கள் பிரச்சினையை தீர்க்க அவர்களுடன் கைகோர்த்து நிற்கின்றோம். வடக்குக்கு முதலாவதாக அதிக நிதியை ஒதுக்கிய கட்சி எமது தேசிய மக்கள் சக்திதான். அந்தக் கட்சி தமிழ் மக்களையும் கவனிக்கிறது.

கடந்த காலங்களில் வெற்றிபெற்ற அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை நீங்கள் சந்திப்பதாக இருந்தால் எவ்வளவு சிரமப்பட்டிருப்பீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், இன்று அப்படி இல்லை. மிக விரைவில் உங்கள் வீடுகள்தோறும் நாம் வருவோம். உங்கள் பிரச்சினைகளைக் கேட்போம். அதனைத் தீர்த்து வைப்போம். போலியான பிரசாரங்களை நம்பி ஏமாறாதீர்கள். வவுனியா திருச்செந்தூர் மில் வீதியை 43 மில்லியன் ரூபாவை ஒதுக்கி புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் மக்களிடம் வாடகையை அறவிட்டும், வரியை அறவிட்டும் வங்கிகள்போல செயற்பட்டன'' - என்றார்.

# யாழில் மூளைக்காய்ச்சலால் குடும்பப் பெண் உயிரிழப்பு!

*(யாழ். நிருபர்)*

மூளைக்காய்ச்சல் காரணமாக யாழில் இளம் குடும்பப் பெண்ணொருவர் நேற்று முன்தினம் (21) உயிரிழந்துள்ளார்.

இதன்போது தெல்லிப்பழை, வீமன்காமம் பகுதியைச் சேர்ந்த கவிந்தன் சாமினி (வயது 22) என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

இவருக்கு கடந்த 14ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டது. இந்நிலையில், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடந்த 19ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தநிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மூளைக்காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# யாழ். உதவித் தேர்தல் ஆணையாளரின் அறிவிப்பு

மே மாதம் 06ஆம் திகதியன்று நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான கடமைகளின்போது யாழ்ப்பாண மாவட்டத்தின் நிர்வாக எல்லைக்குள் உள்ளடங்குகின்ற வாக்கெடுப்பு நிலையங்களுக்கு தேர்தல் பணியாட்குழுவினரின் போக்குவரத்துத் தேவைகளுக்காக தனியார் வாகனங்களை வாடகை அடிப்படையில் இருவித பாவனை உடைய 8 தொடக்கம் 14 ஆசனங்களைக்கொண்ட வேன்களை வழங்க விரும்புபவர்கள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் போக்குவரத்துப் பிரிவில் 25ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் நடைபெறவுள்ள முத்தரப்பு ஒருநாள் தொடரை நேரடியாக ஒளிபரப்பும் டயலொக் டி.வி.

(அகீல் சிஹாப்)

இலங்கை, இந்தியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான நேரடி ஒளிபரப்பு உரிமம் தொடர்பான தகவலை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள குறித்த முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரானது எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது. போட்டிகள் அனைத்தும் கொழும்பிலுள்ள ஆர். பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பகல் நேர போட்டியாக நடைபெறவுள்ளது.

தொடரின் ஆரம்ப ஆட்டம் ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெறும். ஒவ்வொரு அணியும் எதிரணியுடன் தலா இரு போட்டிகளில் மோதும்.

Sri Lanka Cricket WOMEN'S TRI-NATION ODI SERIES 2025

புள்ளிப்பட்டியலில் முதல் இரு இரடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெறும். இறுதிப்போட்டியானது மே மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கை ஒளிபரப்புத் தளங்கள்

கட்டண முறையில் - டயலொக் தொலைக்காட்சியில் த பபரே டி.வி. (அலைவரிசை இல - 63)

இணையம் - த பபரே.கொம், டயலொக் ஐ.வி.யு.

யுடியுப் - இலங்கை கிரிக்கெட்.

# ஆசிய இளையோர் மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்; 8 பதக்கங்களுடன் இலங்கை ஒன்பதாமிடம்: முதலிடம் சீனா வசம்

சவூதி அரேபியாவில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்ட ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை ஒரு தங்கம் உட்பட மொத்தம் 8 பதக்கங்களுடன் 9ஆவது இடத்தைப்பெற்றது.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் தரூஷி அபிசேக்கா தங்கப் பதக்கம் வென்றார். அவர் 2.14.86 நிமிடங்களில் போட்டியை நிறைவு செய்து முதலிடத்தைப் பெற்றதன் மூலம் இளையோர் ஆசிய மெய்வல்லுநர் போட்டி வரலாற்றில் இலங்கை சார்பில் இரண்டாவது தங்கப் பதக்கத்தை அவரால் வெல்ல




முடிந்தது.

இதற்கு முன்னர் 2015ஆம் ஆண்டில் 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் அம்பேகமுவ மத்திய கல்லூரி வீராங்கனை யாமனி துலாஞ்சலி இலங்கைக்காக முதலாவது தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார்.

இலங்கை இந்தப் போட்டியில் மொத்தம் ஒரு தங்கம், 3 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களுடன் 8 பதக்கங்களை வென்றது. 18 வயதுக்குட்பட்ட ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியொன்றில் இலங்கை வென்ற அதிக பதக்கங்கள் இதுவாகும். 2023 ஆம் ஆண்டு நடந்த போட்டியில் இலங்கை ஒரு வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களையே வென்றது.

இந்தப் போட்டியில் 19 தங்கப் பதக்கங்களுடன் மொத்தம் 36 பதக்கங்களை வென்ற சீனா முதலிடம் பெற்றதோடு, இரண்டாவது இடத்தை உஸ்பெகிஸ்தானும் 3ஆவது இடத்தை ஜப்பானும் வென்றன.

# 17ஆவது தடவையாக WWE சம்பியனாகி சாதனை படைத்த ஜோன் ஸீனா



WWE மல்யுத்தத்தின் இறுதிப்போட்டியில் கோடி ரோட்ஸ் மற்றும் ஜோன் ஸீனா இடையிலான விறுவிறுப்பான ஆட்டத்தில் ஜோன் ஸீனா வெற்றி பெற்று அசத்தினார். இதன்மூலம் அவர் 17ஆவது தடவையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

உலக அரங்கில் WWE மல்யுத்தப் போட்டியில் அதிக தடவைகள் சம்பியன் பட்டம் வென்ற பெருமையும் ஜோன் ஸீனாவுக்கு கிடைத்துள்ளது. இந்தப் பட்டியலில் அவருக்கு அடுத்த இடத்தில் ரிக் ப்ளெய்ர் இருக்கிறார்.

இதுவே ஜோன் ஸீனா பங்கேற்கும் கடைசி WWE மல்யுத்த சம்பியன்ஷிப் என்றும் சொல்லப்படுகிறது.

# இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கான வருடாந்த ஒப்பந்தத்தில் 34 வீரர்கள்




இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் 2024 – 2025 ஆண்டு பருவகாலத்துக்கான வீரர்கள் ஒப்பந்த விபரம் வெளியாகியுள்ளது. குறித்த வீரர்களுக்கான ஒப்பந்தம் நான்கு பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி பிரிவு ஏ பிளஸ், ஏ, பி மற்றும் சி என வீரர்களுக்கு ஒப்பந்தம் வகுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தத்தில் மொத்தமாக 34 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். ஏ பிளஸ் ஒப்பந்தத்தில் இந்திய அணியின் முன்னணி வீரர்களான ரோஹித் சர்மா, விராட் கோஹ்லி, ஜஸ்ப்ரிட் பும்ரா மற்றும் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஏ பிரிவில் மொஹமட் சிராஜ், கே.எல்.ராஹுல், சுப்மன் கில், ஹர்திக் பாண்டியா, மொஹமட் ஷமி, ரிஷப் பண்ட் ஆகியோரும் பி பிரிவில் சூர்யகுமார் யாதவ், குல்தீப் யாதவ், அக்ஸர் பட்டேல், யஸஷ்வி ஜெய்ஸ்வால் மற்றும் ஷ்ரேயாஸ் ஐயர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இறுதியாக சி பிரிவு ஒப்பந்தத்தில் ரிங்கு சிங், ரவி பிஸ்னோய், அர்ஷ்டீப் சிங், சர்பராஸ் கான், ஆகாஸ் டீப், திலக் வர்மா, வொசிங்டன் சுந்தர், பிரசித் கிருஷ்ணா, நிதிஷ் ரெட்டி, வருண் சக்கரவர்த்தி, ருதுராஜ் கைக்வாட், முகேஷ் குமார், ரஜத் பட்டிதார், இசான் கிஷன், சிவம் டுபே, சஞ்சு சம்சன், துருவ் ஜுரெல், அபிஷேக் ஷர்மா மற்றும் ஹர்சித் ராணா ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இவர்களது ஒப்பந்த காலம் கடந்த ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி முதல் இந்தாண்டு செப்டெம்பர் 30ஆம் திகதி வரையாகும்.

# விளையாட்டுத் துளிகள்

ரஷ்யாவைச் சேர்ந்த டென்னிஸ் வீராங்கனையான 27 வயதான டாரியா கஸட்கினா அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்து அந்நாட்டுக்காக விளையாடப் போவதாக அறிவித்துள்ளார். அவரது நிரந்தரக் குடியுரிமை விண்ணப்பத்துக்கு ஆஸி. அரசு அனுமதி வழங்கியதாகத் தெரிவித்துள்ள கஸாட்கினா, மெல்போர்னில் குடியேறி, தனது டென்னிஸ் தொழில்முறை ஆட்டத்தைத் தொடரப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★

ஜெர்மனியில் நடைபெற்ற மூனீச் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் ஜெர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வரேவ், அமெரிக்காவின் பென் ஷெல்டனுடன் மோதினார். இதில் அதிரடியாக ஆடிய ஸ்வரேவ் 6-2, 6-4 என்ற செட் கணக்கில் வென்று மூன்றாவது தடவையாக சம்பியன் பட்டம் வென்றார்.

★★★★★★★★★★★★★★★★★★★★

மலேசியாவுக்கெதிராக 59–19 புள்ளிகளால் அபார வெற்றியீட்டிய இலங்கை ரக்பி அணி ஆசியாவின் முதல் நான்கு ரக்பி அணிகளுக்குள் இடம்பிடித்துள்ளது. இதன்படி நிகல் ரத்வத்த தலைமையிலான இலங்கை ரக்பி அணி ஆசிய ரக்பியில் உயர்மட்டத் தொடரான 2025 ஆசிய ரக்பி சம்பியன்சிப் தொடருக்கு தகுதி பெற்றுள்ளது. இதில் இலங்கை அணி ஐக்கிய அரபு இராச்சியம், ஹொங்கொங் மற்றும் தென் கொரியாவுடன் இணைந்து ஆடவுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த நியூசிலாந்து கிரிக்கெட் அணிக்காக ஆடிவரும் துடுப்பாட்ட வீரர் டெவான் கோன்வேயின் தந்தை டெண்டன் கோன்வே நேற்று முன்தினம் காலமானார். நடப்பு ஐ.பி.எல். தொடரில் சென்னை அணியில் 3 ஆட்டங்களில் மட்டுமே ஆடிய டெவான் கோன்வே, தந்தையின் உடல்நலம் கருதியே தொடரின் பாதியில் நியூசிலாந்து புறப்பட்டார். வயதுமுதிர்வு, உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட அவரின் தந்தை நேற்று முன்தினம் காலமானார். இதேவேளை, ஞாயிற்றுக்கிழமை மும்பைக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை வீரர்கள் கையில் கறுப்புப் பட்டி அணிந்து விளையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.சி.சி. ஆடவர் கிரிக்கெட் குழு தலைவராக மீண்டும் கங்குலி



ஐ.சி.சி. ஆடவர் கிரிக்கெட் குழுத் தலைவராக மீண்டும் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி நியமிக்கப்பட்டார்.

கங்குலி தலைமையிலான கிரிக்கெட் ஆடவர் கிரிக்கெட் குழுவில் வி.வி.எஸ்.லட்சுமண் (இந்தியா), ஹமிட் ஹசன் (ஆப்கானிஸ்தான்), தேஷ்மண்ட் ஹெய்ன்ஸ் (வெஸ்ட் இண்டீஸ்), டெம்பா பவுமா (தென்னாபிரிக்கா), ஜோனதன் டிராட் (இங்கிலாந்து) ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் போட்டி விதிமுறை மாற்றம், ஆட்டத்தின் நீண்ட கால முன்னேற்றத்துக்காக எடுக்க வேண்டிய நடவடிக்கை உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஐ.சி.சிக்கு தனது பரிந்துரையை செய்வது இந்தக் குழுவின் பிரதான பணியாகும்.

# நுவரெலியாவில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் சன் பேர்ட்ஸ் வி.க. சம்பியன்



(நானுஓயா நிருபர்)

நுவரெலியா மார்காஸ் தோட்டம் மேற்பிரிவு பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தால் 17ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட அணிக்கு ஏழு பேர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த 19, 20 ஆம் திகதிகளில் மார்காஸ் தோட்ட மேற்பிரிவு பொது மைதானத்தில் நடைபெற்றது.

போட்டித் தொடரில் 16 அணிகள் பங்குபற்றலுடன் நொக்கவுட் முறையில் நடைபெற்ற போட்டிகளில் ஞாயிற்றுக்கிழமை இறுதிப் போட்டியில் இஸ்கிராப் தோட்டத்தைச் சேர்ந்த சன் பேர்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் மார்காஸ் தோட்ட மேற்பிரிவுத் தோட்டத்தைச் சேர்ந்த பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. இதில் வழங்கப்பட்ட நேரத்தில் இரண்டு அணிகளும் கோல் எதுவும் போடாத நிலையில் தண்ட உதை மூலமாக 3.1 என்ற கோல் அடிப்படையில் சன் பேர்ட்ஸ் அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது.

வெற்றி பெற்ற அணிக்கு கிண்ணமும் 40 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டன. இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட அணிக்கு கிண்ணமும் 20,000 ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது. சிறந்த கோல் காப்பாளராக சன் பேர்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் எம். பவித்ரன் மற்றும் சிறந்த விளையாட்டு வீரராக பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அருளும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## PSL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 13

முல்தான் VS இஸ்லாமாபாத்

முல்தான் - இரவு 8.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 11

பெஷாவர் - 147/8 (20)

கராச்சி - 148/8 (19.3)

கராச்சி 2 விக்கெட்களினால் வெற்றி

## IPL - 2025

**இன்றைய போட்டி**

போட்டி இல. - 41

மும்பை VS ஹைதராபாத்

ஹைதராபாத் - இரவு 7.30 மணி

**முடிவு**

போட்டி இல. - 39

குஜராத் - 198/3 (20)

கொல்கத்தா - 159/8 (20)

குஜராத் 39 ஓட்டங்களினால் வெற்றி

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான ஜீனியர் தமிழன் ஏப்ரல் மாத சஞ்சிகைகள்



தற்போது விற்பனையில்...



ஒவ்வொரு சஞ்சிகைக்குள்ளும் இணைக்கப்பட்டுள்ள படத்தாள் ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.

- புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
- வினாத்தாள் I, II வழிகாட்டிகள்
- தமிழ், கணிதம், சுற்றாடல் பாட செயலட்டைகள் (தவணைகளின் அடிப்படையில்)
- திறன் அடிப்படையிலான நுண்ணறிவு விளக்கங்கள்
- தரம் - 5 சுற்றாடல் பாடத்தொகுப்பு - 04, 05
  - இசைக்கருவிகளின் சுற்றாடல்
  - இரு வினாக்களை அடக்கிய ஒரு வினாக்களின் தொகுப்பு
- நுண்ணறிவுத்தொடர் 2 - கட்புலனறிவு
- விஞ்ஞான பரிசோதனைகள்
- சிங்கள, ஆங்கிலப் பாட பயிற்சிகள்

ரூபா 100/= ரூபா 120/= ரூபா 120/=

- மாணவர்களின் சித்திரங்கள்
- கதைக்குள் ஒரு கணிதப்புதிர் - 04, குறுக்கெழுத்துப்போட்டி
- சிறுவர் திருக்குறள் சிறுகதை

தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது

மேலதிக விபரங்களுக்கு :

011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7